1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

| 81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 44-ம் இலக்கம் |
|---|---|---|

## சுதேச வர்த்தமானம்

### யுத்தங்களின் ஞாபகதினம்

இம்மாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையை இலங்கை முழுவதிலும் முதலாவது, இரண்டாவது மகாயுத்தங்களின் ஞாபகார்த்ததினமாக அனுட்டிக்கவேண்டுமென உள்நாட்டு மந்திரி தீர்மானித்திருக்கிறார். ஆகவே, அன்றுபகல் 11 மணிக்கு வழமைபோல இருநிமிடநேர மௌனம் அனுட்டிக்கப்படும்.

### கமக்காரருக்கு உணவும் உடையும்

வவுனியாப்பகுதியிலே கடுங்கோடையால் பாதிக்கப்பட்டுக் கஷ்டநிலைமைக்குள்ளாயிருக்கும் ஆயிரத்துக்குமேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லீம் கமக்காரருக்கு இரண்டாம்முறையாகச் சென்ற 3-ந் திகதியன்று ஏழாயிரம் ரூபாபெறுமதியான அரிசி, தேங்காய், சீனி, தேயிலை, மரவள்ளிக்கிழங்கு முதலிய உணவுப்பொருட்களும், துணிமணிகளும் இலவசமாகப் பகிர்ந்து கொடுக்கப் பட்டிருக்கின்றன.

### கப்பற்சலார் உயர்த்தப்பட்டது

சுவெஸ்கால்வாய்க்குக் கிழக்கிலுள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் கப்பற்போக்குவரத்து நடத்தும் பிரித்தானிய கப்பற்கம்பெனிகள் மத்தியகிழக்கு நெருக்கடிகாரணமாக சாமான்களின் ஏற்றுமதி–இறக்குமதிச்சலாரை நூற்றுக்குப் 15விகிதம் உயர்த்தியிருக்கின்றன. கப்பல்கள் நன்னம்பிக்கைமுனை வழியாகத் தென்னாபிரிக்காவைச் சுற்றி வரவேண்டியிருப்பதால் ஏற்படும் அதிக செலவை ஈடுசெய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### உணவுமந்திரி சொல்லுகிறார்

பாணந்துறையிலே சென்ற 5-ந்திகதியன்று நடைபெற்ற ஓர்தேர்தல்கூட்டத்தில் உணவுமந்திரி பிலிப் குணவர்த்தனபேசுகையில், சாத்தியமான அளவில் சிங்களச்சட்டத்தை அரசாங்கம் துரிதமாக நடைமுறைக்குக் கொண்டு வருகிறது; ஐப்பசி 15-ந் திகதிமுதல் மந்திரிசபை அங்கத்தவர்களிடையே சிங்களத்தில்தான் கடிதத்தொடர்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; பதினெட்டு அரசாங்கபகுதிகள் சிங்களத்திலே தங்கள் அலுவலை நடத்திவருகின்றன; ஏனைய அரசாங்கபகுதிகளும் விரைவிலே அவைகளைப் பின்பற்றும் எனக் கூறியிருக்கின்றார்.

### கிராமச்சங்கத்தின் வேண்டுகோள்

1957-ம்ஆண்டுக்குப்பின் யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்துக்குப் புகையிலைஏற்றுமதியை நிறுத்திவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாலே பீடி, சிகறெற் புகையிலைச் செய்கைக்கு அதிகம்ஊக்கம் அளிப்பதற்கு வசதியாகப் பீடி, புகையிலைக்கன்றுகள் தேவைப்படுவாருக்கு அரசாங்கம் இலவசமாக அவைகளை உதவவேண்டுமென்றுகேட்டு உடுப்பிட்டிக் கிராமச்சங்கத்தின் மாதாந்தகூட்டத்தில் ஏகமனதாக ஓர்பிரேரணை அரங்கேற்றப் பட்டிருக்கிறது.

### கல்லோயாவும் சிகறெற்புகையிலையும்

இம்முறைகல்லோயாவிலே சிகறெற் புகையிலைச்செய்கை பெரும்பலனை அளித்திருக்கிறது. அங்கு குடியேறியவர்கள்பலருக்கும் ஏக்கருக்கு 1,200 ரூபா வருமானம் கிடைத்திருக்கிறது. நூறுஏக்கர்காணியில் சிகறெற்புகையிலை செய்கைபண்ணிய சுமார் 250 குடியேற்றகாரருக்கு ஏக்கருக்குச் சராசரி வீதமாக 850 ரூபா வருமானம் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கையில் செய்கைபண்ணப்படும் சிகறெற்புகையிலையில் கல்லோயாப் புகையிலையே மிகச்சிறந்ததென்று சொல்லப்படுகிறது. இப்புகையிலையை வாங்குவதற்கெனச் சிகறெற்செய்கைக் கம்பெனிஒன்று கல்லோயாவில் ஓர் பண்டகசாலையைத் திறந்திருக்கிறது.

### உப்புநீரும் நெல்வயலும்

யாழ்ப்பாணக் கடலேரித்திட்டத்தின் கீழ் தொண்டைமானாற்றிலே கடலணை அமைக்கப்பட்ட காரணமாக அச்சுவேலியில் பள்ளக்கிராய்என்ற வயற்பகுதியில் உப்புநீர்உட்சென்று சுமார் 150 ஏக்கர் நெல்வயல்நிலத்தைப் பாழாக்கி வருகிறதென்றும், அதனால் உப்புநீர் உட்பிரவேசியாமல் தடுப்பதற்காக ஓர் அணை கட்டப்படவேண்டுமென்றும் பெருந்தொகையான கமக்காரரால் கையொப்பமிடப்பட்டுள்ள மனுஒன்று வடமாகாண அதிபருக்கும், கோப்பாய்ப் பிரதிநிதிக்கும், கோப்பாய்க் காரியாதிகாரிக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. கடல் அடைக்கப்பட்ட காரணமாக முன்சொன்னவயல்நிலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாயும், அதனால் பெரும்பான்மையான வயல்கள் தரிசாகக்கிடப்பதாயும், ஆண்டுதோறும் உப்புநீர்புகுந்து நெற்பயிரை அழித்துவிடுவதாயும் இந்தமனுவிலே தெரிவிக்கப்பட்டு, குறித்தஅணையை அச்சுவேலி-வல்லை றோட்டிலிருந்து செம்பியன்வயல் பகுதிவரைக்கும் அமைக்கவேண்டுமென்று அதிலே கேட்கப்பட்டிருக்கிறது.

### துறைமுகப் படகுவிபத்து

கொழும்புத்துறைமுகத்தில் வேலைசெய்யும் 35தொழிலாளர் சென்ற செவ்வாய்க்கிழமைஅதிகாலை தங்கள் வேலைமுடிந்து ஓர்படகிலே கரைக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் திடீரெனப் படகுகவிழ்ந்தமையால் அவர்களில்ஆறுபேர் நீரில்மூழ்கி இறந்துபோனார்கள். 35பேரும் முதனாள்காலை 8மணிமுதல் ஓர்கப்பலில் வேலைசெய்துவிட்டுச் செவ்வாய்க்கிழமைஅதிகாலை 3-30 மணிக்குக் கரையை நோக்கிப் புறப்பட்டார்கள். 14பேர்மாத்திரம் பிரயாணஞ் செய்யக்கூடியபடகில் 35 பேர்ஏறிக்கொண்டமையால் பாரம்அதிகமாகிப் படகுகவிழலாயிற்று.

### யாழ்ப்பாணமும் சிகறெற்புகையிலையும்

யாழ்ப்பாணப் புகையிலைக்கு இனிமேல் மலையாளப் புகையிலைவியாபாரத்தை நம்பியிருக்கமுடியாது. ஆகையால் கமக்காரர் சிகறெற் புகையிலைச் செய்கையில் அதிககவனஞ்செலுத்தத் தொடங்கியிருக்கின்றனர். இவர்கள் செய்கைபண்ணும் சிகறெற்புகையிலையை இலங்கைப் புகையிலைக்கம்பெனி கொள்வனவுசெய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டிலே தற்போது சிகறெற்புகையிலை செய்கை பண்ணுவாரின் சங்கங்களாய்ப் பதினாறுசங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும், இவைகள் ஓர்ஐக்கியசமாசத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

### கல்விமந்திரி போட்டியிடுகின்றார்

காலிப் புதியநகரசபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக முன்வந்துள்ளவர்கள் சென்ற 3-ந் திகதியன்று தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்தார்கள். கல்விமந்திரியும், பாராளுமன்றத்திலே காலிப்பிரதிநிதியுமான திரு. டபிள்யு. தஹநாயகா கும்பல்வளைவட்டாரத்தில் மீண்டும்போட்டியிடுமாறு நியமனப்பத்திரம் சமர்ப்பித்தார். இவருடன் யு. என். பி. கட்சி அபேட்சகராகத் திரு. என். வி. எவ். நாகரத்ன போட்டியிடுகின்றார். நகரசபை, பட்டினசபை, கிராமச்சங்கம் முதலாம் தலதாபன தேர்தல்களில் மந்திரிமார் கலந்துகொள்ளாது விலகிநிற்க வேண்டுமென்று அரசாங்ககட்சி தீர்மானித்திருந்தபோதிலும் கல்விமந்திரி ஏதோஒருநியாயத்தைச் சொல்லிக்கொண்டு அபேட்சகராக முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதே. இன்னும் அங்குள்ள இருவட்டாரங்களில் அரசாங்ககட்சியைச்சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள்ஐக்கியமுன்னணியும்(எம். ஈ. பி.) ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடுவதும் வியக்கற்பாலதே.

### இந்தியகிறிக்கெற் கோஷ்டி

இந்திய கிறிக்கெற்கோஷ்டிஒன்று இன்றுமாலை ஆகாயவிமானத்திலே கொழும்புவந்துசேர்ந்து, இங்கு மூன்றுஆட்டங்கள் நடத்தவிருக்கின்றது. அதன்முதலாவதுஆட்டம் இலங்கைக் கிறிக்கெற்கோஷ்டியுடன் இம்மாதம் 10-ம், 11-ம், 12-ந்திகதிகளில் கொழும்பிலே ஓவல்மைதானத்திலும், இரண்டாவதுஆட்டம் 14-ம், 15-ந்திகதிகளிலே மலைநாட்டுக்கோஷ்டியுடன் கண்டியிலும், மூன்றுவதுஆட்டம் அகில–இலங்கைக் கிறிக்கெற்கோஷ்டியுடன் 17-ம், 18-ம், 19-ந் திகதிகளில் கொழும்பிலே ஓவல்மைதானத்திலும் நடைபெறவிருக்கின்றன.

### உப்பு ஏற்றுமதி

இலங்கையிலிருந்து பிறநாடுகளுக்கு ஏறக்குறையப் பத்துலட்சம் ரூபா பெறுமதியான முப்பதினாயிரந் தொன்உப்பு ஏற்றுமதிசெய்யக் கூடியதாயிருக்கிறதென்று உப்புக்கமிஷனர் திரு. ஈ. பி. திசைவீரசிங்கம்அவர்கள் கைத்தொழில்மந்திரி காரியாலயத்துக்குத் தெரிவித்திருக்கின்றார். இலங்கையிலே சென்றவருடத்தில் விளைந்ததைப்போன்று மும்மடங்குஉப்பு இவ்வருடத்திலே விளைந்திருக்கிறது. பர்மா, ஜப்பான், பார்சீகம் ஆதியநாடுகளிலே இலங்கைஉப்பு தொன்ஒன்று 30ரூபாவீதம் விற்கப்படுகிறது. இவ்வருடத்திலே இலங்கையில் 1,10,000 தொன்உப்பு விளைந்திருக்கிறது. இதிலே ஆனையிறவில் 50,000 தொன்னும், அம்பாந்தோட்டையில் 30,000 தொன்னும், புத்தளத்தில் 30,000 தொன்னும் விளைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இனிமேலும் ஏமாற்றமுடியாது

இரத்தினபுரித் தமிழ்ச்சங்கத்தின் மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்டம் சென்ற 3-ந் திகதி நடந்தேறியது. அதிலே மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. சி. இராசதுரை அவர்கள் பேசியவிடத்து: "எம்மிடையே காரியப்பர், எதிர்மன்னசிங்கம் போன்ற சந்தர்ப்பவாதிகள் இருப்பதைக்கண்டு நாம் ஆச்சரியப்படுவதில்லை; ஏனெனில், இத்தகைய சந்தர்ப்பவாதிகள் உலகின் எல்லா நாடுகளிலும் எக்காலத்துமே இருந்திருக்கிறார்கள்; ஆனால், காரியப்பர், எதிர்மன்னசிங்கம் ஆதியோரைப் பொறுத்தவகையில் அவர்களை எந்த அரசியற்கட்சியும் இனிஒருபோதுமே நம்பப்போவதில்லையென்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்; தமிழ்ச்சமூகத்தை இனிமேலும் ஏமாற்ற முடியுமென்று இவர்கள் கருதுவார்களாயின் அது பகற்கனவாகும்" எனக் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்

# சிசிலிநாட்டு அரசன்

## அல்லது

# அகந்தையால் உருக்குலேந்தவன்

(இராசசிங்கம் டோறஸ்)

### காட்சி 7.

இடம் : பாப்பரசர் மாளிகை.
நேரம் : சாயந்தரம்,
பாத்திரங்கள் : போலிஅரசன், பாப்பரசர், வல்மண்ட், றூபேட் முதலியோர்.

(பாப்பரசர் தமது சகோதரர்களே மகிழ்வுடன் வரவேற்று ஆசீர்வதிக்கின்றூர். பின்பு அவர்களுடன் சம்பாஷிக்கத் தொடங்கவே றூபேட் பாப்பரசரை வந்து வணங்கி...)

**றூபேட்** — பிதாவே! நான்தான் உங்கள்தம்பி றூபேட். (போலி அரசன் றூபேட்டைக்காட்டி) என்னே இவர்ஏமாற்றி அரசைக் கைப்பற்றியுள்ளார். (பாப்பரசர் மௌனம சாதிக்கின்றூர். றூபேட் வல்மணட்ஆரசரை அண்டி)

**றூபேட்** — அண்ணு! என்னைத் தெரியவில்லையா? நான்தான் உங்கள்தம்பி றூபேட்.

**வல்மண்ட்**—(போலிஆரசன் றூபேட்டைப்பார்த்து) தம்பி! யார்இவன்?

**போலிறூபேட்** — இவன்தான் என் அரணமனே விகடகவி.

**வல்மண்ட்**— இவன் அரண்மனேவிகடகவிக்குத் தகுந்தவன் அல்ல. (றூபேட்டைப் பார்த்து) நீ இங்கே நில்லாதே. வெளியேபோய் நில்.

(றூபேட் துக்கத்துடன் வெளியே போனபின் போலிறூபேட், பாப்பரசர், வல்மண்ட்அரசர்முதலியோர் சல்லாபித்துக்கொண் டிருக்கிறூர்கள். வெளியே இதைப்பார்த்துக்கொண்டிருந்த றூபேட்)

**றூபேட்**— ஐயோ! என்செய்வேன்? எனது உடன்பிறந்தாரே என்னே மட்டுப்பிடிக்க வில்லையே. (சிந்திக்கின்றூன்) அன்றுகோவிலில் சுவாமியார் "பலவான்களேச் சிங்காசனங்களிலிருந்துதள்ளித் தாழ்ந்தவர்களே உயர்த்தினூர்" என்றுகூறிய வார்த்தைகள் எவ்வளவுமகத்துவம் பொருந்தியன! .அவ்வார்த்தைகள் என்னிலே உண்மையுமாயின. இவ்வளவுகாலமும் நான் எனது அகந்தையால் அல்லவா கருத்திழந்து பிதற்றினேன். ஆம்! நான் என்ற மமதையால் கருத்திழந்து பேசிய தவறுக்காக இதையெல்லாம் அனுபவிக்கின்றேன். எனக்கு இத்தண்டனே போதாது. இன்னும் வேண்டும். (முழந்தாட்படியிட்டு) ஐயோ பிதாவே! நான் இவ்வளவுகாலமும் செய்துள்ள குற்றங்குறைகளே மன்னித்துக்கொள்ளும்.

(இப்படியாக மனம்மாறிய றூபேட் அடக்கத்தை மேற்கொண்டான். போலிறூபேட்டின் வருகையால் ரோமாபுரி பிரகாசத்துடன் திருநாட்காலங்களில் விளங்கிற்று. திருநாள் முடிந்து நாட்டிற்குத் திரும்பிப்போக விரும்பிய சகோதரர்கள் பாப்பரசரிடம் விடைபெறச் சென்று வணங்கவே, பாப்பரசர் அவர்களே ஆசீர்வதித்து)

**பாப்பரசர்**— அன்புள்ளதம்பிமாரே! நீவிர் என்றைக்கும் நல்லவர்களாகச் சீவியுங்கள். மக்களின் ஞானவளர்ச்சிக்காகப் பிரயாசப்பட்டு உழையுங்கள். என்றும் உங்கள்நாட்டில் சமாதானம் நிலவச் செய்யுங்கள். பரலோக பூலோகபிதா உங்களே ஆசீர்வதித்துக் காப்பாற்றுவாராக!

**போலிறூபேட் — வல்மண்ட்:** — நாங்கள் போய்வருகின்றோம்.

### காட்சி 8.

நேரம் : மாலேப்பொழுது.
இடம் : சிசிலிநாட்டு அரண்மனே.
பாத்திரங்கள் : றூபேட், போலிறூபேட்.

(நாடுதிரும்பிய போலிறூபேட் காவற்காரன்ஒருவனிடம் றூபேட்டைத் தனிமையாக அழைத்துவரும்படி கூறவே, அவன் றூபேட்டைத் தனிமையாகப் போலி றூபேட்டிடம் அனுப்பிவைத்தான். றூபேட்டைப் போலிறூபேட் நோக்கி)

**போலிறூபேட்** — வருக! விகடகவியாரே! உம்மைத்தான் தனிமையில்வரும்படி அழைத்தேன்.

**றூபேட்**—என்னேத்தனிமையில் தாங்கள் அழைத்த காரணம்யாதோ!

**போலிறூபேட்**—உண்மையைக் கூற வேண்டும். நீர் யார்?

**றூபேட்**— தங்களுக்கு நான்யாரென்று தெரியுமென நினேக்கின்றேன்.

**போலிறூபேட்** — அப்படியென்றூல்......

**றூபேட்**— நான் தங்களால்நியமிக்கப்பட்ட விகடகவி. நான் முன்னே ஏதாவது தவறுதலாகப் பிதற்றியிருந்தால் மன்னித்துக்கொள்ளும்.

**போலிறூபேட்** — என்ன! நீர் இவ்வளவுகாலமாக உள்ளதைத்தானே கூறிவந்தீர். நீர்செய்த குற்றத்தை உணர்ந்தஉடனேயே நீர் பழைய மன்னவனுக மாறிவிட்டீரே. நீர் கொண்ட அகந்தையால் அல்லவோ இவ்வளவுகாலமும் துன்பம் அனுபவித்தீர். இப்பொழுது நீர் திருந்திவிட்டீர்.

**றூபேட்**— அப்படியானுல் தாங்கள் யார்? இதெல்லாம் என்ன?

**போலிறூபேட்** — நானு? கூறுகின்றேன். (பாடுகிறூர்)

**தேவதூதன் பாரும்**
**தேவ கட்டளேயால்**
**வானிடை நின்றுமே**
**வந்திறங்கினேன்**
**மாட்சிமை கொண்ட**
**உந்தனின் கர்வம்**
**அடங்கியே ஆட்சி செய்வாயே!**
**அடங்கியே ஆட்சி செய்வாயே!**

(போலி றூபேட்டாக உருவெடுத்து, இவ்வளவுகாலமும் அரசாட்சிசெய்துவந்த தேவதூதன் தமது சொந்தஉருவத்தைக் காட்டவே, இவ்வளவுகாலமாய் அகந்தையால் உருக்குலேந்திருந்த றூபேட்அரசன் தனது பழையஉடைகளுடன் தோற்றமளித்துத் தேவதூதனே வணங்கித் தோத்திரிக்கவே, தேவதூதன் றூபேட்டை ஆசீர்வதித்து மறைந்து சென்றூர். உடனே றூபேட் முழந்தாட்படியிட்டுத் தேவனே வணங்கி,)

**றூபேட்**— சர்வேசுரா சுவாமி! அடியேன் நான்என்ற மமதையால்செய்த குற்றங்குறைகளே மன்னித்துக் கொள்ளும். (மௌனமாகச்செபிக்கின்றூர்.)

(றூபேட் அரசர் தாழ்மையை மேற்கொண்டு நல்லாட்சிபுரிந்து, மக்களின் ஞானவளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்து வந்தார்.)

சுபம்!

(இந்நாடகம் ஆங்கிலகவிதை ஒன்றை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது.)

---

## சுதேச வர்த்தமானம்

—:—

### வாழ்க்கைச்செலவுப் புள்ளி

இலங்கையிலே சென்றஐப்பசிமாதத்தில் வாழ்க்கைச்செலவு ஏறக்குறைய இரண்டுபுள்ளிகளால் அதிகரித்திருக்கின்றது. சென்றபுரட்டாசிமாதப் புள்ளிகளின்தொகை 99·4. ஐப்பசி மாதத்தில் 101·3 ஆக அதிகரித்திருக்கிறது.

### கிறிஸ்மஸ் தபால்

பிரித்தானிக்கும், ஏனைய ஐரோப்பியநாடுகளுக்கும் கிறிஸ்மஸ்பார்சல்கள் இம்மாதம் 10-ந் திகதிக்குப்பின்னரும், தபால் இம்மாதம் 17-ந் திகதிக்குப் பின்னரும் தபாற்கந்தோர்களில் ஏற்கப்படமாட்டாவென்று பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது.

### மன்னுரும் கோடுங்கானலும்

மன்னூரிலே மழைபெய்யாதகாரணமாகத் தாங்கமுடியாத கடும்வரட்சி இருந்துவருகிறது. மன்னூர்ப்பட்டினத்திலிருந்து ஐந்துமைல் தூரத்திலுள்ள தோட்டவெளிஎனும் கிராமத்திலிருந்து லொறிகளில் குடிதண்ணீர் கொண்டுவரப்பட்டுப் பங்கீட்டுமுறையிலே வழங்கப்படுகின்றது.

### மன்னுரும் கடற்தோழிலாளரும்

கடற்தொழில் நிர்வாகபகுதியின் உபதலேவரான திரு. வி. பீற்றேஸ்அவர்கள் கடற்தொழிலாளரின் தேவைகளே நேர்முகமாகக் கண்டறிந்துபோவதற்காகச் சமீபத்திலே மன்னூர் மாவட்டத்துக்கு விஜயஞ்செய்யலாயினர். மன்னூர்க் கடற்தொழிற் பெரும்பாக அதிகாரியான திரு. என். எஸ். கூத்அவர்களுடன் அவர் பேசாலே, தாழ்வுபாடு, விடத்தல்தீவுமுதலாம் கிராமங்களேத் தரிசிக்கலாயினர்.

### மன்னூர்ஆஸ்பத்திரி

மன்னூர்ஆஸ்பத்திரியிலேபலவிததிருத்தங்களேச் செய்வதற்கென அரசாங்கம் மூன்றலைரலட்சம்ரூபா அனுமதித்திருக்கிறது. மன்னூர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன்அவர்களின் விடாப்பிடியான தூண்டுதலினுலும், வேண்டுகோளின்பேரிலுமே இப்பணம் அனுமதிக்கப்படலாயிற்று. நிர்வாக கட்டடத்தொகுதியிலே திருத்தங்கள்செய்வதற்கும், ஓர்சத்திரவைத்தியமண்டபம், சமையல்அறை, மற்றும் தளபாடங்களுக்குமாக இதுசெலவிடப்படும். ஆஸ்பத்திரியில் எக்ஸ்—றேகருவியும் விரைவில் அமைக்கப்படும்.

### புத்தகுருவும் கோலேகளும்

சிலாபம், ஆனந்தவித்தியாலயத்தில் நடந்தேறிய சிலாப அரசாங்க உத்தியோகஸ்தர்களது புத்த சங்கத்தின் ஆண்டுவிழாவிற்குக் கனம். நாரத மகாதேரோ எனும்புத்தகுரு தலைமைவகித்துப் பேசியபோது: "மாணதண்டனையை ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொணடவர்களில் நானும்ஒருவன்; ஆனூல், மாணதண்டனேயைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தமையானது நாட்டில் குற்றங்களே அதிகரிக்கச் செய்துவிட்டதென நான் அஞ்சுகிறேன்; இன்றுநாட்டில் நடைபெறும் சிலயோசமானகொலேகளுக்கு மாணதண்டனே நிறுத்திவைக்கப்பட்டதும் ஒருகாரணம்என்பதை எவரும் யோசியாமலிருக்க முடியாது; தம்மதீபம்எனப்பெயர்பெற்ற எமதுநாட்டில் — குறிப்பாக இந்தப்புத்தஜயந்தி வருடத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பது துரதிர்ஷ்டமாகும்" எனக் கூறியிருக்கின்றூர்.

### உணவுப்போருட்கள் விலேயேறின

மத்தியகிழக்கிலே யுத்தம் மூண்டுவிட்டதென்றசெய்தி பரவத்தொடங்கியதும் சென்றவியாழக்கிழமைமுதல் உணவுப்பொருட்கள் விலேயேறத் தொடங்கிவிட்டன. உருளேக்கிழங்கின்விலே அந்தர் 26 ரூபாவிலிருந்து 32 ரூபாவாகவும், பம்பாய்வெங்காயம் 24 ரூபாவிலிருந்து 29 ரூபாவாகவும், மல்லியின்விலே 62 ரூபாவிலிருந்து 68 ரூபாவாகவும், மிளகாயின்விலே 160 ரூபாவிலிருந்து 178 ரூபாவாகவும், பருப்பு 200 றூத்தலின்விலே 83 ரூபாவிலிருந்து 88 ரூபாவாகவும், சம்பா அரிசியின்விலே 80 கொத்து 90 ரூபாவாகவும் உயர்ந்துவிட்டன.

### உணவுப்போருட்களின் விலே

மிளகாய், பருப்பு, மிளகு, உருளேக்கிழங்கு, மாசிமுதலிய முக்கியஉணவுப்பொருட்களின்விலே சென்றதிங்கட்கிழமைமுதல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. வியாபாரிகள் உணவுப்பொருட்களின்விலேயை உயர்த்திக் கொள்ளேலாபம்அடிப்பதைத் தடுக்கும்நோக்கமாகவே அரசாங்கம் இந்நடவடிக்கையை எடுத்திருக்கிறது. உணவுப்பொருட்களே மறைத்துவைப்பவர்களேயிட்டும், கள்ளச்சந்தைக் காரரையிட்டும் கவனமாயிருக்குமாறு உணவுப்பகுதித் திடீர்பரிசோதனேக் குழுவினருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. தற்போது அரிசி, சீனி, கோதுமைமா, பாண் ஆதியவற்றின் விலேகள்மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

### புத்தகுருவும் தமிழ்மோழியும்

கொழும்புத் திருக்குறள்மன்றத்தின் மூன்றுவது திருக்குறள் மகாநாடு சென்றஞாயிற்றுக்கிழமை அங்கு சரஸ்வதிமண்டபத்தில் நடந்தேறியது. அதில் நாவலப்பிட்டிக் கதிரேசன்கல்லூரிஆசிரியர் கனம். தர்மரத்தின தேரோ, பி. ஏ எனும்புத்தகுரு "வள்ளுவரும், புத்தரும்" எனும் பொருள் பற்றித் தமிழில்பேசியவிடத்துக் கூறியதாவது: "இன்றுதமிழ்மக்கள் தங்கள்மொழிக்கு இன்னல் ஏற்பட்டுவிட்டதென வருந்துகின்றனர். தங்கள்மொழிக்குப் பிறர் தீங்குசெய்ய முயன்றுல் யார்தான் கவலேப்படமாட்டார்? தமிழ்மொழி சிறந்தமொழி. சிறந்தஇலக்கியங்களேத் தன்னகத்தே கொண்டுள்ள பெரும்மொழி தமிழ்மொழி. இத்தகைய சிறப்புவாய்ந்த தமிழ்மொழிக்குரிய உரிமைகளே அளிக்கமறுப்பவரை என்னென்று சொல்வது? தமிழ்மொழியின்சிறப்பை உணர்ந்தவர்கள் அதற்குஉரிமை கொடுக்க ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். தமிழுக்குத் தீங்குசெய்யவோ, தமிழை ஒதுக்கித்தள்ளவோ, தமிழுக்குத் துரோகஞ்செய்யவோ நினேக்கவும்மாட்டார்கள். நான் சிங்களமொழியில் எவ்வளவு அன்பும், பாசமும் கொண்டுள்ளேனே அதேபோல் தமிழ்மொழியிலும் எனக்கு அன்பும், பாசமும் இருக்கின்றன. சிங்களவருக்குச் சிங்களமொழி எப்படியோ, அப்படியே தமிழர்களுக்கும் தமிழ்மொழி என்பதை உணரவேண்டியதுஅவசியம். தமிழ்மொழி வாழ்க! தமிழர்கள் வாழ்க!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### அர்ச்சியசிட்டர்களின் நாமங்கள்

மாஷல்றிற்ருேவைச் சர்வாதிகாரியாகக் கொண்டதாய்க் கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவருகின்ற யூகோசிலேவியநாட்டின் கம்யூனிஸ்தஅதிகாரிகள் அங்கு கிறீஸ்துவநாமங்களைக்கொண்ட நகர்கள், கிராமங்களின் பெயர்களை மாற்றிவிடும்படியாகக் கட்டளைவிடுத்திருக்கின்ருர்கள். அங்கு சிலோவீனிய மாகாணங்களில்மாத்திரம் அர்ச்சியசிட்டவர்களின்நாமங்களைத் தாங்கியனவாய் நானூற்றுக்குமேற்பட்ட கிராமங்கள் இருந்துவருகின்றன. இவற்றில்அநேகர் சென்பார்பரு, சென்அன்னுள், சென் மரியா, சென்பீற்றர், சென் ஜோண் எனும்நாமங்களைக் கொண்டிருக்கின்றன.

### நீலப்படையணித் தலைமைஸ்தானம்

பாத்திமாபதியிலே பரம்பரையாகப் பெரும்பிரஸ்தாபமாய் நடந்தேறும் ஐப்பசி 13-ந் திகதிக் கொண்டாட்டம் இம்முறைநிகழ்ந்தபோது, உலகமுழுவதிலும் செபதப பரித்தியாகங்கள் அதிகமாக நடைபெறச்செய்வதற்கான முயற்சிகளை விருத்திசெய்வதற்கென்று அப்பதியில் அமைக்கப்பட்டிருந்த நீலப்படையணியின் சர்வதேச தலைமைஸ்தானத்தைக் கருதினல் மார்திருச்சங்க தலைவரான கருதினல்திசருன்ஆண்டவர் திறந்துவைத்தார். மூன்றுபிள்ளைகளுக்கும் தேவதாயார்அருளிய ஈருந்த காட்சியின் வருடாந்தஞாபகதினமாகிய அன்றுநிகழ்ந்த கொண்டாட்டத்திற்குச் சுமார்ஐந்துலட்சம் யாத்திரிகர்கள் பாத்திமாபதியில் குழுமியிருந்தார்கள். இந்த நீலப்படையணிக் கட்டடத்தில் பிரித்தானிய கத்தோலிக்கர் உபகரித்தபணங்கொண்டு அவர்களின்சாலைஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

### ருஷியர்களும் வேதபுத்தகமும்

சென்ற கோடைகாலத்தில் ரோமாபுரியைத்தரிசித்த ருஷிய உல்லாசப்பிரயாணிகளில் அநேகர் ருஷியபாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட புதியஏற்பாட்டுப் பிரதிஒவ்வொன்றையும் தங்களுடன்கொண்டு ருஷியாவுக்குத் திரும்பியிருக்கிருர்கள். இவர்கள் சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்தினூடாகவோ, அன்றேல் அம்மகாலயத்தினுள்ளோ நடந்துசென்றபோது, ருஷியகுருவானவர் ஒருவரால் இடையிலே நிறுத்தப்பட்டார்கள். இவர்களுடன்பட்சமாகஅவர்சம்பாஷித்து, ருஷியபாஷையில் அச்சிடப்பெற்ற புதியஏற்பாட்டின் ஒவ்வோர்பிரதியை அவர்கள் ஒவ்வொருவருக்கும் அன்பளிப்புச் செய்தார். ரோமாபுரியிலே ருஷிய அப்போஸ்தலத்துவ தொண்டிற்கென வருங்காலக்குருமாரைப் பயிற்றிவருகின்ற ருஷியகுருமடத்தைச்சேர்ந்த பெயர்வெளிவராத இந்தக்குருவானவரும் ஓர் ருஷியரே. அவர்களும் மிகுந்தநன்றியறிதலுடன் இப்பிரதிகளைப் பெற்றுக்கொண்டதாகச் சுவாமியார்கூறியிருக்கின்ருர்.

### கருதினலும் மேற்றிராணியாரும்

11-ம்இன்னேசென் பாப்பானவர் முத்திப்பேறுபெற்றபட்டம் சூடியதைச் சமீபத்தில்கண்ட திருச்சடங்காசார திருச்சங்கம் ஒடெஸ்கல்கி குடும்பத்தைச் சேர்ந்த மற்றிருவருக்கும் (1841-ம்ஆண்டு மரணமடைந்த கருதினல்கார்லோ ஒடெஸ்கல்கி — இற்றைக்கு 336 வருடங்களின் முன்மரணமடைந்த விஜெவானே நகரின் ஜியோர் ஜியோ பியெற்ரோ ஒடெஸ்கல்கி மேற்றிராணியார்) முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கானவிசாரணையில் ஈடுபட்டிருக்கின்றது. ரோமன்சக்கிராதிபத்திய இளவரசர்ஒருவரின் புதல்வரான கருதினல் ஒடெஸ்கல்கிஆண்டவர் குருவாயிருந்தபோது 9-ம் பத்திநாதபாப்பானவருக்கு ஞான ஆலோசனைகாரராய் இருந்தார். வருங்கால 13-ம் சிங்கராயபாப்பானவருக்குக் குருப்பட்டம்அருளியவரும் இவரே. சபினநகரில் கருதினல்மேற்றிராணியாராய் விளங்கியிருந்த இவர் மீண்டும்நிலைநாட்டப்பெற்றயேசுசபையில் சேரவேண்டுமென நெடுநாள் ஆசித்திருந்து, கடைசியாக 1839-ம்ஆண்டு கருதினல்பதவியைத்துறந்து யேசுசபையில் சேர்ந்துகொண்டார்.

### ஓர் அதிசய குருவானவர்

இதுகாலவரை உலகில் குருத்துவ 60-ம்ஆண்டு வைரயூபிலியைக் கண்டுகளித்துள்ள ஒரேயொரு சலேசியன்சபைக் குரவரான வண. மைக்கேல் மைக்கார்திசுவாமியார் சமீபத்திலே லண்டன்நகரில் பட்டர்சி எனுமிடத்திலுள்ள திருஇருதயஆண்டவர் கோவிலிலே தமது யூபிலித்தோத்திரபூசையை நிறைவேற்றினர். தற்போது 84வயதுடையவரான சுவாமியார் ஓர்வாலிபராயிருக்கையில் இவரின் சுகநிலை அத்துணைமோசமாய் இருந்தமையால் வழமையிலே சலேசியன் சபையாரின் குருப்பட்டவயதுக்கு ஒருவருடத்துக்கு முன்னதாகவே இவர் குருப்பட்டம் அருளப்பெற்ருர். இவர்அப்போது மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவராகக் கருதப்பட்டார். அன்று இவர் தமதுயூபிலித்தோத்திர பாடற்பூசையை நிறைவேற்றிய போது அவரின்தெளிவானகுரலையும், திடசித்தத்தையும், சிவப்பெழுத்துக் குறிப்புகள்மட்டிலே காண்பித்த சாவதானத்தையுங் கவனித்தபலரும் ஓர்இளங்குருவானவருக்குரிய குணங்குறிகளை அவரிலேகண்டு பிரமித்துப்போயினர். இவர் தமது குருத்துவ வாழ்க்கையின் 60 வருடங்களிலும் பெரும் பதவிகள் வகித்துச் சிறப்பாக உழைத்திருக்கின்ருர். ஓர்காலம்இவர் ரோமாபுரியிலே சலேசியன்சபை அதிசிரேஷ்டரின் ஆங்கில காரியதரிசியாயும் கடமையாற்றியிருக்கிருர்.

### மகன்குருவாகவர விரும்பினன்

காவ்றிக்என்ற பதினெருவயதுள்ள தனது புதல்வன் ஓர்குருவாகவர வேண்டுமெனவிரும்பினன். அதனல் மாட்டீன்பாஸி என்பவர் கம்யூனிஸ்தஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவிலிருந்து ஓர் திறந்த வள்ளத்தில் தனதுகுடும்பத்தினரை ஏற்றிக்கொண்டு சுதந்திரத்தைநாடி வெளியேறலாயினர். அதிரியாற்றிக்கடலிலே மூன்றுநாள் பிரயாணஞ்செய்தபின் இத்தாலியிலே பாறிஎனுமிடத்தில் திவ்வியபூசை காணச் சென்றுகொண்டிருந்த மக்கள் அவர்கள்தூரத்தில் வரும்போது கண்டுகொண்டார்கள். அப்போது அநேகஆடவர்கள் கடலில்இறங்கி மாட்டீன் பாஸியையும், அவர்மனைவியையும், இருபுதல்வரையும், சகோதரர் ஒருவரையும் அன்புடன் வாழ்த்தி வரவேற்று, வள்ளத்தைக் கரைசேர்க்க உதவிசெய்தார்கள். இவர்கள் அரசியல்அகதிகளாக இத்தாலியில் அடைக்கலம்புகுந்தார்கள்.

### மாதாவின் மலைச்சிங்காசனம்

உலகமுழுவதிலும் கம்பிகள் மூலம் போக்குவரத்து நடத்துகிறவர்கள் எல்லோரினதும் பாதுகாவலான தேவதாயாருக்கு ஓர் "சிங்காசன"மாக வடஇத்தாலிய அல்ப்ஸ்மலைத்தொடரிலுள்ள உந்நதமான பிஸ்ஸோஸ்ரெல்லா என்றமலை தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மலையின் உச்சியிலிருந்து வடக்கு நோக்கினல் றைன்நதியின் உற்பத்திஸ்தானத்தையும், கிழக்கு நோக்கினல் சுவிற்சர்லாந்திலுள்ள என்காடின் எனுமிடத்தையும், தெற்குநோக்கினல் போநதிச்சமபூமியையும் காணலாம். இந்தஉச்சியில்தான் தேவதாயாரின் மூன்றுதொன்நிறைகொண்ட சுரூபம்ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. ஓர்இத்தாலிய சிற்பியான எகிதியோ கசாகிருன்தே என்பவர் இதனைச்செய்திருக்கின்ருர். நான்குசம்மனசுகள் பற்றிப்பிடித்திருக்கும் "கேபிள்" கம்பிகளால் தாங்கப்பெற்ற ஓர்முகிலின்மீது தேவதாயார் நிற்கும் பாவனையாய் இந்தச்சுரூபம் அமைந்திருக்கும். சுரூபத்தின் உட்புறத்திலே அதன் உச்சிபோய்ச் சேர்வதற்கெனப் படிப்பாதைஒன்று இருந்துவரும். சுரூபத்தின் உச்சியிலே மூவர் தங்கப்போதிய இடவசதிஉண்டு. சுரூபத்தின்ஆதாரபீடம் ஓர்சிற்றாலயத்தைக்கொண்டிருக்கும். சுரூபத்தை மலையின்உச்சிக்குக் கொண்டுசெல்வதே இப்போது ஓர்பெரும் பிரச்சினையாய் இருக்கிறது. பொதுசன, இராணுவ அதிகாரிகள் இதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிருர்கள். சுரூபம் தூக்கிச்செல்லப்படும்போது குறுக்கிடும்கிராமங்களிலே வீடுகளின்முன்புறமாக ஏதும்தடைகள்இருந்தால் அவைகள் அகற்றிவிடப்படும். சுரூபத்தை மலையின் உச்சிக்குக் கொண்டுசெல்வதற்கெனத் தற்காலிக கம்பிப்போக்குவரத்துச் சாதனம்அமைப்பதிலே அங்குள்ளமக்களுக்கு அல்பைன் படைவீரரின் பட்டாளம் ஒன்று உதவிசெய்துகொண்டுவருகிறது.

### மகாஉந்நதகட்டடம்

பிறேசில்நாட்டிலே சாஓ போலோநகரில் சம்பாவிலுவானவரை மகிமைப்படுத்துமுகமாகக் கட்டியெழுப்பப்படவிருக்கும் ஓர்கோபுரமானது உலகின் மகா உந்நதமான கட்டடமாக நிலவுவதாகும். இந்தநகரம் சம்பாவிலுவானவரின் நாமத்தையே பூண்டது. 1,394அடிஉயரமுடையதாய் எழுப்பப்படவிருக்கும் இந்தக் கோபுரம் நியூயோக்நகரிலே தற்போது உலகில்மகாஉந்நதமான "எம்பையர் ஸ்ரேற் பில்டிங்" என்ற கட்டடத்திலும் 144அடி கூடியஉயரமுள்ளதாய் இருக்கும். இதன்உச்சியிலே கங்கிறீற்றில் செய்து வெண்கலம்கொண்டு மறைத்துப் பலப்படுத்தப் பெற்றுள்ள 204அடிஉயரமான சம்பாவிலுவானவர் சுரூபம்ஒன்று நிறுவிநிற்கும்.

### மோட்டர்சைக்கிளில் திருயாத்திரை

25வயதுடைய அல்பிறெட் யோசெவ் பார்பொஸா, 24வயதுடைய ஜோண் யோசெவ் நோறன்ஹாஎனும் இந்தியயாத்திரிகர்கள்இருவர் சென்னைநகரிலிருந்து மோட்டர்சைகிளிலே 11,160மைல்தூரம் பிரயாணஞ்செய்து சமீபத்தில் ரோமாபுரி போய்ச் சேர்ந்திருக்கிருர்கள். இவர்களுக்குத்தேவைப்பட்ட பெற்ரோலுக்கும், எண்ணெய்க்கும் ஏற்பட்டசெலவுபணமெல்லாம் திரு. நொறன்ஹா கடமைபார்க்கின்ற எண்ணெய்க் கம்பெனிஒன்ருல் இறுக்கப்படலாயிற்று. இந்தயாத்திரிகர்கள் இருவரும் பாகிஸ்தான், பலுக்கிஸ்தான், ஈருன், ஈருக், ஜோர்தான், சீரியா, லெபனன், துருக்கி, கிறீஸ், யூகோசிலேவிய நாடுகள் வழியாய் அங்குபோய்ச் சேரலானுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கார்த்திகை மாதம்

உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்கென ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** விசுவாசிகள் பரிசுத்த பரம திவ்விய நற்கருணையைத் தங்கள் வாழ்க்கையின் மையமாக அமைத்துக் கொள்ளும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இந்தோனீஷியாவிலே கிறீஸ்துவ அடிப்படையில் சமூக அமைப்பு உருவாகும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 8-ந் திகதி

## ருஷிய இரும்புத்திரை

ருஷியசோவியற்அரசின் இரும்புத்திரையிலே வெடிப்புக்கண்டுவிட்டதென அமெரிக்கஜனாதிபதி ஐஸன்ஹாவர்அவர்களும், அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. டல்லஸ்அவர்களும் கூறியதைக்கேட்டுக் கம்யூனிஸ்தஉலகம் ஒருவேளை நகையாடியிருக்கும். ஆனால், ருஷியஇரும்புத்திரையில் வெடிப்புக் கண்டிருக்கிறதென்பது இந்நாட்களிலே போலாந்திலும், ஹங்கேரியிலும், ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் நிகழ்ந்திருக்கிற சம்பவங்களிலிருந்து நன்குபுலனாகின்றது. போலாந்திலிருந்து ருஷியபடைகள் பலவந்தமாக வெளியேற்றப் பட்டதிலிருந்து அங்கே கம்யூனிஸ்த ஆட்சிக்குச் சாமணி அடிக்கப்பட்டுவிட்டது.

ஹங்கேரியிலும், சுதந்திரதாகங்கொண்ட அந்நாட்டுமக்கள் கம்யூனிஸ்த ஆட்சியைஎதிர்த்து இந்நாட்களில் நடத்தியபுரட்சிக் கலகத்தில் சோவியற்படைகள் பாரிய யுத்தங்களிற்போன்று பீரங்கிகள், தாங்கிகளுடன்சென்று கலகத்துக்கெழுந்த மக்களைக் குரூரமாக வதைத்துக்கொன்று மீண்டும் கம்யூனிஸ்தஆட்சியை நிறுத்திவைக்குமாறு செய்துள்ள அட்டூழியங்களாலே ஹங்கேரியநாடு—முக்கியமாக அதன் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற்நகர் இரத்தக்களரியாகக் காட்சியளிக்கின்றதாமே. எகிப்திலே பிரித்தானியும், பிரான்சும் படையெடுத்ததையிட்டு ஒற்றைக்காலிலே நிற்கின்றருஷியதலைவர்கள் ஹங்கேரியில்நடத்திய திருவிளையாடலையிட்டு அமெரிக்க ஜனாதிபதியும், ஐக்கியநாடுகளின் ஸ்தாபனமும் செய்துள்ள ஆட்சேபனைகள்பற்றிச் சிந்தியாததென்ன? ருஷியா என்னதந்திரம் பண்ணியபோதிலும் அதன் இரும்புத்திரையிலே வெடிப்புக்கண்டுவிட்டதென்பது நிச்சயம். இதற்குச் சான்றாகச் சிலவருடங்களின்முன்னர் ரோமாபுரியில் ஓர்இளம்பெண்ணுக்குத் தேவதாயார் காட்சியளித்துக் கூறியிருப்பதே போதியசான்றாகும். அஃது வருமாறு :

"திருக்கன்னிகை உலகத்தையும், சகல ஆத்துமாக்களையும் — முக்கியமாகருஷியாவையும், ருஷியமக்களையும் உற்றுநோக்கினார். மாதாவின்பார்வையிலே மிகுந்த கவலை தெளிவாகக் காணப்பட்டது. ஆயினும், அத்துடன்மிகுந்த அன்பும், அருளும் காணப்பட்டன. அவர் பெருமூச்செறிந்து கூறியதாவது: "பரிதபித்து இரங்கத்தக்க ஆத்துமாக்கள்! ஆயினும், அவர்கள் சுதந்திரத்தின் அண்மையில் நிற்கிறார்கள். இந்தமக்கள் இன்னும்ஓர்சொற்பகாலம் அதிகம் உபத்திரவப்படுவார்கள். ஆனால், அவர்கள் தேவனைநேசிக்கும் சுதந்திரத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்வார்கள். நானும் அந்தஆத்துமாக்களை எனதுஇருதயத்தோடு சேர்த்து அணைத்துக்கொள்ளக் கூடியவராயிருப்பேன். தேவநீதி ருஷியாவின்மேல் நிற்கின்றது. அந்தமக்கள் விழித்தெழுந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடையே என்ன நிகழ்கின்றதென்பதை நீ அறிவதில்லை. ஆனால், அது விரைவிலே உனக்குத் தெரியவரும். ருஷியாவுக்குரிய அந்தப்பெரிய காலநேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது..."

"பரிசுத்த கன்னிகை ருஷியாவை ஆட்சிசெய்கிறவர்களை உற்றுநோக்கிவிட்டு மேலும் கூறியதாவது: தாங்கள் உலகத்தைவெற்றிகொண்டுவிட்டதாக இந்தமனிதர்கள் நம்புகிறார்கள். அதற்குப்பதில் அவர்கள் தோல்வியின்காலநேரத்தைஅடைந்துவிட்டார்கள். தேவநீதி அவர்கள்மேல் நிற்கின்றது. அதிகம் உத்தமர்களாகிவிட்டருஷியமக்களை மாதாஉற்றுநோக்கி ஓர்கால் பெருமூச்செறிந்துவிட்டு, ஓ, அந்தமக்களை நான் காப்பாற்றுவேன். அவர்கள் எனது இருதயத்தினிடமாகத் திரும்புவார்கள்."

தேவதாயார் அப்போதுகூறியவைகளையும், இரும்புத்திரைக்குப் பின்னால் இப்போது உண்டாயிருக்கும் எதிர்ப்புகளையும் ஆராய்வாகக் கவனிக்குமிடத்து, சோவியற்ருஷியாவின் காலம் வரையறுக்கப்பட்டு விட்டதென்றே கொள்ளலாம். மெலியாரை வலியார்கேட்டால் வலியாரைத்தெய்வங்கேட்குமன்றோ! பலாத்காரத்தை மேற்கொண்டு ஒருநாடு மறுநாடுகளை — ஒருசாகியம் மறுசாகியத்தினரை அடக்கியாளுவதென்பது ஒருபோதுமே நின்றுபிடிக்கமாட்டாது. இதற்கு உலகசரித்திரமே போந்தசான்றாகும். அதனால் சோவியற்அரசின் சர்வாதிகார கொடுங்கோலாட்சி அழிந்தொழியுங்காலம் அண்மிவிட்டதென்றே நம்பியிருக்கலாம்.

## யுத்த கலவரம்

அன்று எகிப்தின் ஜனாதிபதியான நாஸர் சுயெஸ்கால்வாயைத் தேசியமயமாக்கமுனைந்து அதில்கைவைத்தபோது உலகத்துக்கு ஏதேதுநாசம் ஏற்படுமோவென்று அகிலமுழுவதுமே அங்கலாய்த்தது. இந்தச் சுயெஸ் விஷயம் சாம்பருள் அக்கினிபோன்று சிலகாலம் அமர்ந்திருந்து இப்போது குமுறிக்கொண்டு எரிமலையாக வெடித்துக்கடைசியாக மத்தியகிழக்கில் நெருக்கடியானநிலையை உண்டுபண்ணிவிட்டது. ஆகவே, இதுமற்றுமோர் உலகயுத்தத்துக்கு அடிகோலிவிடுமோ என்பதுதான் இன்றையகவலையாகும். எகிப்தும், யூதரின் நாடாகிய இஸ்ரேயேலும் தம்முள் இடையிடையே சுரண்டிக்கொள்வது இன்று நேற்றுத் தொடங்கியது ஒன்றன்று. சுயெஸ்கால்வாயிலே எல்லாநாடுகளுக்கும் கப்பல்பிரயாண சுதந்திர உத்தரவாதமளித்த எகிப்தியஜனாதிபதி இஸ்ரேயேல்நாட்டுக் கப்பல்களுக்குமாத்திரம் அதனை அடைத்துவிட்டதும், இஸ்ரேயேலின் தென்எல்லைநீளம் எகிப்தியஅரசாங்கமும், அதன் இராணுவபலன்களும் செய்துவந்த அநீதச்செயல்களுமே இஸ்ரேயேலின் படையெடுப்புக்கான காரணமாகலாம். இஸ்ரேயேல்நாடு எண்ணாயிரம் சதுரமைல் விஸ்திரணமுள்ளது. 25லட்சம் குடிசனங்களைக் கொண்டது. அதனால் ஒருகுட்டிநாடு; அதனைக் குட்டித் தொலைத்துவிட வேண்டுமென்பது எகிப்தினுடையவும், அதனோடு சேர்ந்த அராபியநாடுகளினதும் குறிக்கோளாகும். ஆனால், இன்று அந்தக்குட்டிநாடு சுயெஸ்மீது படையெடுக்கப்போய்ப் பிரித்தானியும், பிரான்சும் சுயெஸ்கால்வாய்ப்பகுதியில் எகிப்துக்கு எதிராய்க் கூட்டாக நடவடிக்கை எடுத்துப் படைஇறக்கியுள்ளன. அதனால் இன்று மத்தியகிழக்குப்பகுதி யுத்தமயமாய்க்காட்சியளிக்கத் தொடங்கியது. அதன் போக்கானது மற்றோர்மகாயுத்தத்தை உண்டுபண்ணிவிடுமோ என்று உலகமுழுவதும் கலங்கியது. ஆனால், ஐக்கியநாடுகளின் ஸ்தானம்எடுத்துக்கொண்ட தீவிரமுயற்சியாலும், அகிலமுழுவதும் ஏற்பட்டகிளர்ச்சியாலும் மத்தியகிழக்கிலே யுத்தநிறுத்தஞ்செய்யப்பட்டு விட்டதென அறிவது ஓர்பெரும் ஆறுதலேஎன்க.

---

● 1936-ம் ஆண்டு அபிசீனியாவை யுத்தத்தில்வெற்றிகொண்ட இத்தாலிய வெற்றியாளனும், முசோலினியின் பாசிஸ்தம் வீழ்ச்சியடைந்தபின் இத்தாலியின் முதலாவதுபிரதமராக வந்தவருமான மாஷல் படோக்கிளியோ சென்ற 31-ந் திகதி புதன்கிழமை காலஞ்சென்றாரெனச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

● இங்கிலாந்திலே லீட்ஸ்நகர் மேற்றிராசனத்தை மகாவந். ஹீனன் ஆண்டவர் 1951-ம் ஆண்டு பொறுப்பேற்றார். அங்ஙனம்அவர் பொறுப்பேற்றபின் அம்மேற்றிராசனத்தின் நாற்பதாவது கோயில் சமீபத்திலே ஸ்பெயின் போத் பட்டினத்தில் திறந்துவைக்கப்படலாயிற்று. 23,000 பவுண்செலவு செய்து கட்டப்பட்ட இந்தப்புதியகோவில் மோட்சாரோபணமாதா கோவிலாகும்.

## அமெரிக்க ஜனாதிபதி

சென்ற 6-ந்திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலே ஜெனறல் ஐஸன் ஹாவர் அவர்கள் மீண்டும் அமெரிக்கஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளாரென நேற்றைத்தினம் வானொலிச்செய்தி தெரிவிக்கலாயிற்று. அதனால் இவர் மேலும் நான்குவருடகாலம் அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்துவருவார். தேர்தலிலே இவருக்குத் திரும்பவும் கிடைத்துள்ள வெற்றியானது அவரது சொந்தக் குடியரசுக்கட்சிக்கோ, அன்றேல் அதன்கொள்கைகளுக்கோ கிடைத்த வெற்றியென்று கூறுவதைக்காட்டிலும் அவர்பெற்றுள்ள பிரஸ்தாபமும், செல்வாக்குங்காரணமாக அவருக்குக்கிடைத்த ஓர் மகத்தான வெற்றியென்றே சொல்லலாம். இரண்டாவது உலக யுத்தத்திலே பிரதம சேனாபதியாயிருந்து நேசதேசங்களின் சேனாசைனியங்களை அணிவகுத்துநடத்தி வெற்றிமாலை சூடிய ஐஸன்ஹாவர்அவர்கள் மத்தியகிழக்கு நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் யுத்தகுமுறல்கள் ஏற்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு வழிகாட்டிச் செல்லத் தொடர்ந்துஜனாதிபதியாக இருந்துவரவேண்டுமென்று அமெரிக்கமக்கள்விரும்பி அவரையேதிரும்பவும் தெரிவுசெய்திருப்பது வரவேற்கத்தக்கதே. "நல்லகடவுள் எனக்குத் தந்துள்ள திறமையையும், என்னிடமுள்ள வல்லமையையுங்கொண்டு இத்தேசத்திலுள்ள 16கோடியே 80 லட்சம் அமெரிக்கமக்களின்நன்மைக்கும், உலகில்சமாதானம் நிலவுதற்குமாக உழைக்கும் ஒரு அலுவலை நானும், எனதுசகாக்களும் தொடர்ந்து செய்துவருவோம்" என்று தேர்தல்வெற்றியின்பின் கூறியதும் பாராட்டத்தக்கதே.

---

### பழையஏற்பாட்டின் இராசநகரம்

அமெரிக்க புதைபொருள்ஆராய்ச்சியாளர் ஜெருசலேமிலிருந்து வடக்கே எட்டுமைல்தூரத்திலே எல்-ஜிப் எனுமிடத்துக் கூச்சமீபமாகஜிப்கன்என்றும் அழைக்கப்பட்டதான கபாவோன்என்ற பழையஏற்பாட்டின் நகரைக் கண்டுபிடித்திருக்கின்றனர். கபாவோன்என்பது பழையஏற்பாட்டிலே "இராசநகரங்களுள் ஒன்" றாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கிறீஸ்துநாதர் பிறப்பதற்கு 1,200 வருடங்களின்முன் இதுகட்டப்பெற்றதென நம்பப்படுகிறது. அங்கு கண்டறியப்பட்டவைகளில் மகாவினோதமானபகுதி கடினமான கற்பாரிலிருந்து வெட்டப்பட்ட பாரிய ஓர் குளமேயென்று பெண்சில்வேனிய நூதன பொருட்காட்சிச்சாலை தெரிவிக்கின்றது. சாமுவேலின் (அரசர்கள்)இரண்டாவது புத்தகம், இரண்டாம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளதுதான் இந்தக்குளமென்றும், சவுலின் படைத்தலைவனான அப்னரின் போர்வீரருக்கும், தாவீதனது பட்டாளங்களின் படைத்தலைவனான ஜோவாப்பின்போர்வீரர்களுக்குமிடையே ஓர் யுத்தம் நடைபெற்றஇடம் இதுதானென்றும் நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகம் சதமா ?

கீழைத்தேசங்களிலே அமலனின் சிலுவைக்கொடியாகிய விருதுக்கொடியை நாட்டிக் கீழ்தேசங்களின் அப்போஸ்தலர்என்ற புகழ்நாமம் ஈட்டிய அர்ச். பிரான்சீஸ் சவேரியார் தமது இளமையிலே கல்வி கலைக்கியானங்களில் வல்லுனராக விளங்கினுர். அவரின் நுண்ணறிவையும், சாதுரியத்தன்மையையும் கண்டோரெல்லாம் ஆச்சரிய வசத்தராஞர்கள். அவர் உலக மகிமையில் திளைத்துச் சகல ஐஸ்வரியங்களுடனும் வாழ்வாரென்பதே அநேகரின் எண்ணமாகவிருந்தது. ஆனுல், தேவதிருவுளம் வேறுகவிருந்தது. அஞ்ஞானநாடுகளின் மத்தியில் மெய்ஞ்ஞானஒளியின் தீபத்தை ஏற்றிவைக்குஞ் சேவைக்கு அவரை அழைக்கத் தேவன் சித்தமானுர். பிரான்சீஸ்குவின் வெள்ளை உள்ளத்தில் தப்பறையானஎண்ணங்கள் தலைகாட்டாமல் அவர் தமதுதெய்வீக கடாட்சத்தால் காத்துவந்தார். அத்துடன் அவரின் காவற்றுதுவஞக அர்ச். இஞ்ஞாசியாரை ஏற்படுத்தவும் திருவுளமானுர். உலக சுகசெல்வங்களில் நாட்டங்கொண்டிருந்த பிரான்சீஸ்குவின் உள்ளத்திலே அமலனின் குரலோசையை எதிரொலிசெய்ய அர்ச். இஞ்ஞாசியார் முனைந்தார். அவருடைய விருதுவாக்கியத்தை — அதாவது "மனிதன் உலகம்முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழந்தால் அவனுக்கு வரும் இலாபமென்ன?" என்பதை அடிக்கடி பிரான்சீஸ்குவுக்கு நினைவூட்டுவார். ஆரம்பத்திலே இவ்வாக்கியம் அதிகபலனை அளிக்கவில்லையெனினும் நாளடைவில் பிரான்சீஸ்குவின் இதயத்தில் அது ஆழமாகப்பதிந்தது. அமலனின்குரலோசை அவர் இதயத்தில் எதிரொலிசெய்தது. உலகம்அநித்தியம், நீர்மேல்குமிழி, நிலையிலா வாழ்க்கை என்னும் முதுமொழிகள் அவரின் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்தன. உலகை அமலனிடமாக வெற்றிகொள்ள அயராதுழைத்துவரும் அர்ச். இஞ்ஞாசியார் அடியிட்டசபையில் சேரும்ஆவல் பிரான்சீஸ்குவின் இதயத்தில் உதயமாயிற்று.

நல்லூர்.

---

● ரோமாபுரியிலே திருச்சடங்காசார திருச்சங்கமானது மற்றும் மூன்று பாப்புமாருக்கு அர்ச்சியசிட்டபட்டமும், முத்திப்பேறுபெற்றபட்டமும் சூட்டும்விஷயமாய் ஆலோசனைசெய்துவருகிறது. 1730-ம் ஆண்டு மரணமடைந்த 13-ம் ஆசீர்வாதப்பரும், 1276-ம் ஆண்டு மரணமடைந்த 10-ம் கிறகோரியாரும், 1870-ம்ஆண்டு ரோமாபுரி கைப்பற்றப்பட்டபின் "வத்திக்கானின் முதலாவதுமறியற்கார" ரான 9-ம் பத்திநாதருமே அம்மூன்றுபாப்புமாருமாவர்.

## மொழிப்போரும் இந்தியத் தமிழரும்

"இலங்கைத்தமிழர்களின் மொழிப்பிரச்சினையிலே சென்னை அரசாங்கம் தலையிடப் போவதில்லையென்று தற்பொழுது நிலவக்கூடிய அபிப்பிராயம் தவறுனது. தென்இந்தியாவிலுள்ள பலஆயிரக்கணக்கான தமிழ்மக்களும், பலம்பொருந்திய பலஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் இலங்கைத்தமிழர்களின் போராட்டத்திற்கு உதவத்தயாராக உள்ளனர். இதற்கு ஒத்துப்போகவேண்டிய நிலையிலேயே சென்னை முதல்மந்திரி திரு. காமராஜ் நாடாரும், நிதிமந்திரி திரு. சி. சுப்பிரமணியமும், மதுரைத் தமிழ்ச்சங்கதலைவர் திரு. சேதுபதி, இராமநாதபுரம் இராஜா ஆகியோரும் இருக்கிறுர்கள். மக்களின் உணர்ச்சிக்கு மாறுபட்டகொள்கையைக் கடைப்பிடிக்கும் காலத்து அவர்கள் பதவியிலிருக்கமுடியாத ஒரு நிலையும் தாய்த்தமிழகத்தில் உருவாகி உள்ளது. இலங்கையின் மொழிப்பிரச்சினையை இந்திய தமிழ்மக்கள் மிகவும் கூர்மையாகக் கவனித்து வருகிறுர்கள். கடல்கடந்த தமிழர்கள் நடாத்தும் மொழிப்போராட்டத்தைத் தமிழ்மக்கள் பாராட்டி வாழ்த்துகிறுர்கள். இலங்கைத் தமிழர்கள் நடத்தும் மொழிப்போராட்டம் மிகநியாயமானது. மொழியை இழந்து, கலை, நாகரிகம், பண்பாடு, உரிமைவாழ்வு அனைத்தும் இழந்துவாழும் ஒரு நிலையில் மாறுபட்டகருத்து யாருக்கும் இருக்கமுடியாது. இலங்கைத்தமிழர் தமது உரிமைப்போராட்டத்திற்கு இந்திய தமிழர்களது ஒத்துழைப்பைக் கோரினுல் அங்கிருந்து உதவிகிடைக்கும். எந்தவிதமான ஒத்துழைப்பையும் உதவத் தென்னிந்திய தமிழர்கள் ஆயத்தமாக இருக்கிறுர்கள்." இவ்வாறு கொழும்புத் திருக்குறள் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புவந்துசேர்ந்த தமிழறிஞர் திரு. கே. ஏ. பி. விசுவநாதம் அவர்கள் கூறியிருக்கின்றுர்.

---

## இந்தியாவின் புதிய இராச்சியங்கள்

இந்தியாவின் சரித்திரத்தில் இம்மாதம் 1-ந்திகதியன்று ஓர்புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அதன் இராசீய தேசப்படமே அன்று மாற்றிவரையப்பட்டுள்ளது.

தற்போதைய 29இராச்சியங்களும் அன்றுமுதல் 14பெரிய புதியஇராச்சியங்களாகத் தொழில்படத் தொடங்கின. ஆறுசிறியபகுதிகள் மத்தியஅரசாங்கத்தின்கீழ் நேரடியானநிர்வாகத்தில் இருந்துவரும்.

புதியஇராச்சியங்களில் பெரும்பாலானவை மொழிவாரி அடிப்படையிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே மொழிபேசும் மக்களை இணைக்கும்வகையில் இவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னைஇராச்சியம் தமிழ்மக்களைக் கொண்டதாகவும், கேரளம் மலையாளிகளைக் கொண்டதாகவும் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

தெலுங்கருக்கு ஆந்திரமும், கன்னடமொழி பேசுவோருக்கு மைசூர்இராச்சியமும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பழைய ஐதராபாத்திலுள்ள சிலபகுதிகளும் மைசூர்இராச்சியத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஐதராபாத் போன்ற சிலபழைய இராச்சியங்கள் இந்திய தேசப்படத்திலிருந்து அறவே நீக்கப்பட்டுவிட்டன.

ஐதராபாத்தில் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிபேசுகிறவர்கள்தான் அதிகம். கன்னடம் அதிகமாகப்பேசப்படும்பகுதிகள் மைசூர்இராச்சியத்துடனும், தெலுங்கு அதிகமாகப் பேசப்படும் பகுதிகள் ஆந்திரத்துடனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பழைய ஐதராபாத் இராச்சியமே தேசப்படத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் புதிய மாறுதலின்படி இந்திய சமஸ்தானுதிபதிகள் கடைசிகாலத்தில் தாங்கள் வகித்த முக்கியமானபதவிகளை இழந்துவிட்டனர். இதுவரை இவர்களில் பலர் இராச்சியப்பிரமுகர்கள் என்னும்பதவிகளை வகித்துவந்தனர். இப்பொழுது இதுவும் பறிபோய்விட்டது. ஏனைய இராச்சியங்களில் இருந்துவருவது போல் இங்கும் கவர்னர்கள்தான் இருப்பார்கள். இராச்சியபிரமுகர்கள் பதவிகளே இல்லை.

முந்திய 29 இராச்சியங்களும் இப்பொழுது ஆந்திரம், அசாம், பீஹார், பம்பாய், ஜம்மு, கஷ்மீர், கேரளம், மத்தியபிரதேஷ், சென்னை, மைசூர், ஒறிஸா, பஞ்சாப், இராஜஸ்தான், உத்தாபிரதேஷ், மேற்குவங்கம்எனப் 14 இராச்சியங்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தமான், நிக்கோபார்தீவுகள், டில்லி இமாசலபிரதேஷ், லக்கதீப, அமீனதீப தீவுகள், மணிபுரி, திரிபுரா ஆகிய ஆறுபகுதிகளும் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் இருந்துவரும்.

---

## பத்துலட்சம் தமிழர்கள் பகிஷ்கரித்தால்

சென்ற 11-4-56இல் பிரசுரமான "ரைம்ஸ்"பத்திரிகையின் ஞாயிறுவார வெளியீட்டிலே "The Tatler's Diary" என்ற தலையங்கத்தின்கீழ் "நாம்அதைச் சாதிக்கமுடியாதா?" என்ற வினுவிற்கு எழுதப்பட்டிருந்தது வருமாறு:

"எந்தஅரசாங்கமும் சட்டங்களைக் கொண்டுவந்து புகுத்தலாம். ஆனுல், அவைகளைநடைமுறைக்குக்கொண்டு வருவதோ முற்றுகமற்றோர்விஷயமாகும். "சிங்களம் மட்டும்" சட்டத்தை நிறைவேற்றிவைப்பதைப் பத்துலட்சம்தமிழ்மக்கள் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தால் என்னநடக்கும்? என்றகேள்விக்கு எவர்தானும் இதுவரை திருப்திகரமான ஓர் பதில் அளிக்கவில்லையென்று அரசாங்கசுபாஷா பகுதியிலுள்ள அதிகாரிஒருவர் அன்ெருருநாள் எனக்குச்சொன்னுர். அப்போதுநான் இஸ்ருயேல் நாட்டின் முன்னைநாள்பிரதமர் திரு. மோஷிஷறெற்அவர்கள் சமீபத்திலே கொழும்பில்நடத்திய பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருந்ததை எடுத்துக்கூறியபோது, இந்தஅதிகாரி பிரமித்துப்போயினுர். இஸ்ருயேல்நாடு சுமார் 25லட்சம் குடிசனத்தைக் கொண்டது. இதில் நூற்றுக்கு ஏழுவிகிதம் அராபியர்களை அடக்கியிருக்கிறது. அராபியர்களுக்கும், யூதர்களுக்குமிடையே இருந்துவருகின்ற கடும்பகையையிட்டு அராபியர்கள் இஸ்ருயேல் நாட்டில் வசிப்பதற்கு இடமேயில்லாது இருப்பார்களென்று எவரும் சிந்திக்கமுடியும். ஆனுல், இஸ்ருயேல்நாட்டில் ஏபிரேயர்களைப்போல அதே அந்தஸ்தை அராபியர்களும் உள்ளபடியே கொண்டிருக்கிறுர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதைக்கேட்டதும் தற்போதைய நெருக்கடி தீர்ந்ததும் இஸ்ருயேல் அரசாங்கம் தனது பாஷைப்பிரச்சினையை அத்துணை சமாதானமுறையிலே தீர்த்துவைக்க எப்படிச்செயலாற்றியதுஎன்பதைக் கண்டறிந்துவருமாறு அரசாங்கம் தூதுக்கோஷ்டிஒன்றை அனுப்பிவைக்க வேண்டுமென்று அரசாங்க சுவபாஷைப்பகுதியைச்சேர்ந்த அந்தஅதிகாரி குறிப்பிடலாயினர்."

---

● ஒல்லாந்தின் புதிய மந்திரிசபையில் ஐந்துகத்தோலிக்கரும் அடங்கியிருக்கிறுர்கள். அந்நாட்டிலே முதன்முதலாக ஓர்மந்திரியாக நியமனம்பெற்ற செல்வி மார்க்கா குளொம்பென்ற பெண்மணியும் இவர்களில் அடங்குவாள். முன்போலப் பிரதமர் ஓர்கத்தோலிக்கர்அல்லாத டக்ளர்டி றீஸ்அவர்களே. வெளிநாட்டுமந்திரியார் ஓர்கத்தோலிக்கரான திரு. லன்ஸ்அவர்கள்.

● பிரான்சிலே லொறேய்ன் இரும்புத்தொழிற்சாலைத் தலைவரின் பாரியாரான 76வயதுடைய கீதே வெண்டெல் அம்மையார் பாலேமோனியலிலுள்ள கார்மேல்சபைக்கன்னிகாமடத்தில் ஓர் கன்னியாஸ்திரியாகச் சேர்ந்திருக்கின்றுர். யேசுவின் சிஸ்றர்கத்தறின் எனும் நாமத்தைத் தற்போதுஇவர் தரித்திருக்கின்றுர். இவரின் நாயகர்இற்றைக்கு ஓர் ஆண்டின்முன் காலஞ்சென்றுர்.

● தங்கள் சபையைச் சேர்ந்தவரான வண. லீனுஸ் மைக்கியோர்னன் சுவாமியார் இற்றைக்கு 40 வருடங்களின்முன் ஆழிவாய்ப்பட்ட ஓர்கப்பலுடன் கடலில் அமிழ்ந்திவிட்டாரென நினைத்து, இங்கிலாந்திலே புரேட்வே எனுமிடத்திலுள்ள திருப்பாடுகளின் சபைக்குருமார் அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகத் திக்கப்பாடற்பூசைநிறைவேற்றியிருந்தார்கள். அச்சபைக்குருமார்தானே சமீபத்தில் அவரது குருத்துவ தங்கயூபிலியைக் கொண்டாடியிருக்கிறுர்கள்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவின் வேண்டுதலினுல் எங்கள்குடும்பத்திற்கு வரஇருந்த பொல்லாங்குகள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிப்போல் மறைந்துவிட்டன. இவைஎல்லாவற்றிற்கும் எனதுநன்றியைச் சதாசகாய மாதாவிற்குச் சமர்ப்பிக்கிறேன்.

நாரந்தனை. T. S. F.

### நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயநாதரின் திருவருளினுலும் பரிசுத்தமருதமடுச்செபமாலைத்தாய்அளித்த வரங்களினுலும் — நித்தியசகாயமாதாவிடம் பத்திஉருக்கமான வேண்டுதலினுலும் — பொம்மேயிநாயகியின் நவநாட் செபத்தை விடாப்பிடியாக ஓதிவந்தமையினுலும் எமதுபிள்ளையின் விவாகவிஷயம் எமதுஎண்ணப்படியே வெற்றிகரமாக நிறைவேறியது.

திருஇருதயநாதருக்கு அனவரதகாலமும் ஸ்தோத்திரமும் பரிசுத்ததேவதாயாருக்கு அளப்பரியநன்றியும் உண்டாகக்கடவது.

மாதாவின்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் சிறந்த மருந்து

கீழ்த்தேசங்களில் தேனை ஒருசிறந்த உணவுப்பொருளாகவே மக்கள்மதிக்கின்றனர். பழங்கள் அழுகிப்போகாமல் பாதுகாப்பதற்கு அது ஒருநேர்த்தியான மருந்தாகப் பயன்படுவது மட்டுமன்றி, பணிகாரங்கள், மிட்டாய்கள்முதலியன செய்வதற்கும் அது பெரிதும் உபயோகப்படுகிறது. எனினும், அதன் முக்கியமான உபயோகம், அதனுடைய ஔஷத குணங்களிலேயே தங்கியிருக்கிறது. மனிதனின் உடம்புக்கு ஊட்டமளிக்கக் கூடியசத்து அதில் நிறையவிருக்கிறது.

தேன் வெகு சுலபமாகச் சீரணமடைகின்றது. எந்தவிதமான மாறுதலுமின்றியே இரத்தத்தோடு எளிதில் கலந்துவிடுகிறது. அதுசீரணிப்பதில் துளியும் கஷ்டமில்லை. சாதாரணசர்க்கரையையுட்கொண்டாலே வாய்வுஉண்டாகக்கூடிய அளவுக்குப் பலவீனமடைந்துள்ள சீரணக்கருவிகளையுடைய சிறிய குழந்தைகளுக்கும், மற்றும் வயதானவர்களுக்கும் அது உகந்தது. லெவலோஸ், குளுக்கோஸ் ஆகியசர்க்கரைகள் தேனில் ஏறக்குறையச் சமபாகங்களாக இருப்பதே தேன்எளிதில் சீரணமாகிவிடுவதற்கு முக்கியகாரணம்.

ஹிந்திபாஷையில்தேனை "ஷஹாத்" என்று சொல்லுகிறார்கள். லத்தீன் மொழியில் (சுத்தஞ்செய்யப்பட்ட) தேனை "மால்ரெபுறட்டும்" என்று அழைக்கிறார்கள். இயற்கையானது, மனிதனுக்குத் தந்துள்ள மிட்டாய்களில் தேன் மிகப்பழமையானதும், தலைசிறந்ததுமாகும். ஆதலின் ஒரு விசேஷித்த உணவுப்பொருளென்ற அந்தஸ்துத் தேனுக்கு அளிக்கப்பட்டிருப்பது முற்றிலும்தகும். குழந்தைகளுக்கு ஒரு சுகபேதிமருந்தாகவும் அது உபயோகப்படுகிறது. நெஞ்சுச் சளிக்கட்டிகளை இளக்கி வெளியேற்றும்சக்தி அதற்கிருப்பதனால் இருமல்வியாதிகளுக்கு அதுபெரிதும் பயன்படுகிறது.

தேனைப் பூரணபோஷணையுள்ள ஒருஉணவென்றே சொல்லலாம். அதில் சக்திநிறையவுண்டு. மிகுந்த பலத்தை அது உண்டாக்குகிறது. மூளைவேலைகளுக்கும், கைவேலைகளுக்கும் வேண்டியதிறமையை அது அதிகரிக்கச் செய்கிறது. தேனில் பிசிதம், இரும்பு, மற்றுஞ்சில முக்கியமான போஷணசத்துக்கள் காணப்படுகின்றன. புளித்ததேனில் காணப்படும் இயற்கையான மலமிளக்கிச் சர்க்கரைகள் மலக்கட்டை உடைக்கும் ஒருவகைவாயுவை உண்டாக்குவதால், மலச்சிக்கல் நிவிர்த்தியாகிக் குடல் சாதாரணமாக வேலைசெய்வதற்கு அது உதவியாய் இருக்கின்றது. தேனின் மலமிளக்குந் தன்மைக்கு அதிலுள்ள சிலபுளிப்புச் சக்திகளே காரணம். இந்தப் புளிப்புச் சக்திகள் வயிற்றில் சீரணமாகாதிருக்கும் உணவை எளிதில் சீரணிக்கக் கூடியதாக மாற்றிச் சிறுகுடல்களின் வேலையையும் இலகுவாக்கி விடுகின்றன.

தேன் நாவரட்சியைப் போக்குகிறது. இருமல்மருந்துகளில் இது பொதுவாகச் சேர்க்கப்படுகிறது. குழந்தையின் உடம்பில் உஷ்ணத்தையும், பலத்தையும் உண்டாக்குவதற்காக இது சேர்க்கப்படுகிறது. தொண்டைக் கம்மலுக்கு அளிக்கப்படும் நிவாரணங்களில் இதுவுமொன்று. தேனானது குரலைக்காதுக்கினிய தாக்குகின்றது. துளசிஇலைச் சாற்றுடன் தேனைச்சேர்த்துக் கொடுத்தால் இருமலும், சலதோஷமும் மாயமாக மறைந்துவிடும். கண் வியாதிகளுக்கும், நேத்திரபடலரோகத்தின் ஆரம்பத்திலும் தேன்வெகுவாகப் பயன்படுகிறது.

தினமும் ஒருடம்ளர் வெந்நீர் அல்லது குளிர்ந்தசலத்துடன் ஒரு மேசைக்கரண்டி அல்லது இரு மேசைக்கரண்டி தேனைச்சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் ஆரோக்கியமும், பலமும், போஷணையும் அபிவிருத்தியடையுமென்பதில் சந்தேகமில்லை. தேனுடன் எவ்வளவு வெண்ணெய் வேண்டுமானாலும் சேர்த்துச் சாப்பிடலாம். தேன்மிகுந்தபோஷணையளிக்க வல்லதென்பது நிபுணர்களின் கருத்து. மேற்கண்ட விதமாகத் தயாரிக்கப்பட்டபானம் தாகத்தைத் தீர்ப்பதுடன், சூரியவெப்பத்தில் அலைவதாலுண்டாகும் நோய்களையும் அண்டவிடாமல் தடுக்கிறது.

பாலுடனோ அல்லது பாலாடையுடனோ அல்லது வெண்ணெயுடனோ சேர்த்துத் தேனையுட்கொண்டால் பொதுஆரோக்கியம் விருத்தியடைவதுடன், வீரியமும் பலமும் அதிகரிக்கின்றன. கடுமையான சுகவீனத்துக்குப்பிறகு ஒருநோயாளியை அதிதுரிதமாகச் சொஸ்தப் படுத்தக்கூடிய மருந்து தேனைப்போல் வேறொன்றுமில்லையென்றேசொல்லிவிடலாம். ஒருகோப்பை வெந்நீரில் ஒருமேசைக்கரண்டிதேனை ஊற்றிக் கொடுத்தால், ஈளைநோயாளிக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கும். அது சுகந்தரும் பானமென்பது ஒருபுறமிருக்க, அதன் பலமூட்டும் குணங்களோ முக்கியமாகும்.

தேகத்தை இளைக்கப்பண்ணும் சகலவிதமான வியாதிகளிலும் தேன் நற்பலனை அளிக்கிறது. ஏனென்றால், உடம்பிலுள்ள சிவ அணுக்களுடன்அது அதிதுரிதமாகச்சேர்ந்து அவைகளுக்குத் தேவையான உணவையளிக்கின்றது. இதனால், பொது ஆரோக்கியம் சீக்கிரத்தில் அபிவிருத்தியடைகிறது. பசியைக்கொடுத்து, புத்தியைக்கூராக்கி ஒருவருக்குச் சுறுசுறுப்பையுமளிக்கவல்ல இத்தேனைத் தினமும் உபயோகித்தால் மிகுந்த நன்மைதரும். எலுமிச்சம்பழ ரசத்துடனோ அல்லது திராட்சைப்பழ ரசத்துடனோ தேனைக்கலந்து கொடுத்தால் எப்பேர்ப்பட்ட இருமலும் மறைந்துவிடும். குழந்தைகளின் இருமலுக்கு ஒருதேக்கரண்டி எலுமிச்சம்பழரசம் இருதேக்கரண்டி வெந்நீர் ஆகியவற்றுடன் ஒருதேக்கரண்டிதேனைக் கலந்துகொடுத்தால் குணமாகும்.

இருதயத்துக்கு ஊக்கமளிப்பதில் தேனுக்குஇணையாகத் தேனைத்தான் சொல்லவேண்டும். டைபோயிட் (குடற்காய்ச்சல்), நியூமோனியா (கபவாதசுரம்) போன்ற வியாதிகளால் நெடுங்காலம் பீடிக்கப்பட்டுச் சீரணக்கருவிகளும், இருதயமும்பெரிதும்பலவீனமடைந் திருப்பவர்களுக்குத் தேன் மதிப்பிடற்கரிய பலனளிக்கும். போஷணை இல்லாததினால் இருதயம் பலவீனமடைந் திருப்பவர்களுக்கும், நியூமோனியாக் காய்ச்சலால் வருந்தியவர்களுக்கும் தேன் விசேஷநன்மை புரிகின்றது. இருதயத்துக்குப் புத்துயிரளித்து, நோயாளியைச் சீவனுடன் வைத்திருக்கிறது. சக்தியூட்டக்கூடிய ஒருஉணவென்றமுறையில் தேனுக்குநிகராக வேறொன்றுமில்லை.

உடம்பில் எந்தப்பாகமாவது வெந்நீர்பட்டு வெந்திருந்தால் உடனே தேனை அங்குதடவினால் வெகுசுகமாயிருக்கும். கொப்பளங்கள் தோன்றுமலும், இரத்தம்கட்டாமலும் அது தடுக்கின்றது. விஷரணங்களின் மீதும் அதைத்தடவினால் விசேஷ குணமேற்படும். முகத்துக்கு அழகு தரக்கூடிய மருந்துகளில் தேன் உபயோகப்படுகிறது, முகத்திலுள்ள பருக்களைப் போக்குவதுடன் அவைகள் வளராமலும் தடுக்கின்றது. பொதுவாகத் தேகபலம்குன்றியிருக்கும்போதும், மாரடைப்பு ஏற்பட்ட சமயங்களிலும் தேனைஉட்கொள்ளல் நலம். இரத்தக்கொதிப்பை அடக்குவதில் அதுபெரிதும் உபயோகப்படுகிறது. கிச்சிலிப்பழரசம், மீன் எண்ணெய், குளுக்கோஸ் ஆகியவற்றிற்குப்பதில் தேனை வெற்றிகரமாக உபயோகிக்கலாம்.

# சத்திரத்தில் இடமில்லை

விருத்தம்

—"ஞானி"

திரித்துவத்தின் நடுநின்ற தேவ தேவன்
செகமூன்றும் ஒருநொடியில் படைத்துக்காப்போன்
சரித்திரத்திற் கெட்டாத புதுமை யெல்லாஞ்
சதகோடி கோடியெனத் தந்துஞானம
புரித்தருளும் அற்புதத்தோன் மனுவுக் காகப்
புவிதனிலே யவதரிக்க அந்தோ! அந்தோ!
தரித்திரரும் வந்தொதுங்கித் தங்கும் தர்ம
சத்திரத்தும் இடமில்லைச் சற்றேஎண்ணும்!

●

மன்னுயிரின் பாவபழி வருத்தம் மாற்ற
மாசற்ற தாயாரின் மகனாய்வந்து
தன்னுயிரை யீவதற்கு முன் வருத்தம்
தங்குமச ரேத்திருந்து பெத்தலேமைத்
துன்னுமட்டும் நேர்ந்தவழி வருத்தம் மாரி
சோவென்று பொழிவருத்தம் மெய்வருத்தம்
பன்னரிய வருத்தமெலாம் பட்டும தங்கப்
பாழான சத்திரமும் இல்லைப்பாரீர்!

●

மாசற்ற மாதாவும் நேச ஞான
வளனரும் அருகிருந்து மகிழுந்தேவன்
தேசுற்ற தூதுவர்கள் துதிக்கும் தேவன்
திகழ்வெள்ளி வழிகாட்டத் தெரிந்ததேவன்
ஆசற்ற மூவேந்தர் ஆயரோடு
அகிலமெலாந் தொழுதேத்தும் அன்புத்தேவன்
தாசற்கே உதவிசெய்ய வந்த வர்க்குச்
சத்திரத்தில் இடமில்லைச் சரியோசொல்வீர்!

●

பாராளும் முடிவேந்தர் மனையில் வந்து
பஞ்சுமெத்தை தனிற்பிறக்கப் பாவைமார்கள்
சீராளா! கண்ணுறங்காய் என்று பாடித்
தினம்போற்றச் செனிக்காமல் தேவதேவன்
காராளும் வெல்லைமலைக் குகையில் வாடிக்
கரிதான புல்லணையைத் தெரிந்தார்செய்ய
நீராளும் உலகமதில் சத்தி ரத்தும்
நிர்மலனுக் கிடமில்லை என்னபாவம்!

●

முன்னாளில் நல்லிசையாஸ் முதலா னோர்கள்
மொழிதீர்க்க தரிசனங்கள் கருதாமக்கள்
பின்னாளிற் கூன்குருடு செவிடு தீராப்
பிணிநீக்கி மரித்தோரை எழுப்புந்தேவன்
இந்நாளில் வந்தாரென் றெண்ணிப் பாரா
திடமிங்கே சத்திரத்தில் இல்லையென்றார்
எந்நாளும் இக்கொடியர் போல நாமும்
இதயத்தில் இடமில்லை என்கின்றோமே!

●

காட்டினிலே யிடமுண்டு மிருகந் தங்கக்
கலகலன்றே யிசைபட்சி சாலந்தங்கக்
கூட்டினிலே இடமுண்டு குசேல னென்றே
கூறிவரும் ஏழைக்குங் குறித்துத்தங்க
நாட்டினிலே இடமுண்டு நமது யேசு
நாதருக்கோ சத்திரத்தும் இடமதில்லை
ஏட்டினிலே அடங்காத பிழை பொறுத்தே
இதயத்தில் இடந்தந்து காருந்தேவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**யாத்திரிகர்களின் ஸ்தலமாகத் திகழும் (ஆயித்தியமலை) சதாசகாயமாதா ஆலயவீதியில் இருபத்தெட்டடிஆழமான நன்னீரூற்றுக்கிணறு :**

தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதாஆலய பங்குவிசாரணைக்குருவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகளின் விடாமுயற்சியால் இது வெட்டிக்கட்டப்பட்டது. இக்கிணற்றைக் கட்டுவதற்குப் பெரும்பாகம் உதவிதந்த மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவர் அவர்கட்குப் பங்குவிசுவாசிகள் நன்றிபாராட்டுகின்றனர். புதியகிணறு 1-11-56-ந்திகதி காலை 10-30மணியளவில் பங்குவிசாரணைக்குருவால் ஆசீர்வதிக்கப்பட்டு, அதினின்றும் தண்ணீர் அள்ளப்பட்டது.

### கிறீஸ்துஇராசா திருநாள்

**தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதா ஆலயத்தில் கிறீஸ்துஇராசா திருநாள் :**

திரு. எஸ். ஈ. பெர்ணண்டோஅவர்கள் புத்தம்புதிய கிறீஸ்துஇராசா சுரூபம்ஒன்று ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். 3-11-56 சனிக்கிழமை பிற்பகல் 6மணியளவில் புதிய சுரூபம் கட்டளைக்குருவால் ஆசீர்வதிக்கப்பட்டதும் சுற்றுப்பிரகாரமாக யாவரும் அதனை எடுத்துக்கொண்டு ஆலயவீதியை வலம்வந்தனர். பின்னர் மாலைஆராதனைபாடப்பட்டுச்சற்பிரசாத ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. திருநாளன்று 4-11-56 ஞாயிற்றுக்கிழமை காலை 5—30மணிக்கு 1-ம் பூசையும், 7 மணியளவில் கட்டளைக்குருவால் கிறீஸ்துஇராசாவுக்குத் தோத்திரமாகப் பாடற்பூசையும் நிறைவேறின. "கிறீஸ்துவே நமதுஇராசா" என்பதுபற்றிச் சுவாமிகளால் ஓர்அரிய பிரசங்கமும் செய்யப்பட்டது. விசுவாசிகள் எல்லோரும் பக்தியுடன் தேவ விருந்து அருந்தி மகிழ்ந்தார்கள்.

— நிருபர்

## பேசாலைத் தபால்

பேசாலை, பாத்திமா பாடசாலைமாணவரின் பெருமுயற்சியால் வாங்கப்பட்ட வானொலிப்பெட்டியொன்று சென்ற 5-ந்திகதி திங்கட்கிழமை அப்பாடசாலை மாணவர்மன்றத்தின் விசேட கூட்டமொன்றின்போது ஸ்தாபகஞ் செய்து வைக்கப்படலாயிற்று. இவ்விசேடகூட்டத்திற்கு வண. எஸ். எஸ். வில்லவராசிங்கம் சுவாமியவர்கள் தலைமை தாங்கினர். செல்வன் கு. நீக்கலஸ்எனும் மாணவனுல் மின்சாரத்தின் பயன்என்னும் பொருள்பற்றியும், செல்வன் அன்ரன் பல்டானோவினுல் நெப்போலியனின் வரலாறுபற்றியும், செல்வன் வின்சென்ற் டலிமாவினுல் சுவெஸ் பிரச்சினைபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. செல்வன் க. யோசெவ் இன்னிசைப்பாடல்களினுல் சபையோரை மகிழ்வித்தார். ஆசிரியர் அந்தோனிமுத்துஅவர்கள் வானொலியின் சேவைபற்றி மாணவர்கட்கு எடுத்துரைத்தார். 5-ம் வகுப்புமாணவர்நடித்த ஆபிரகாம் நாடகமும். 3-ம் வகுப்புமாணவர் நடித்த வீரன்நாடகமும் சபையோரின் பாராட்டுதல்களைப் பெற்றன. பின்னர் தலைமையாசிரியர் திரு. சிங்காரயர் அவர்கள் வானொலியின்வரலாற்றை எடுத்தோதிப் பாடசாலையின்சார்பாக வானொலிப்பெட்டியைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க வானொலியைத் திறந்து வைத்த சுவாமியவர்கள் இன்றுமாணவர்களின் கல்வியில் வானொலி பெற்றிருக்கும் முக்கிய இடத்தைப்பற்றிப் பேசி, அதன் பயனைப்பெறுவதற்கு முயற்சிக்கவேண்டுமெனக் கூறினர். மாணவர் மன்றத்தலைவர் சிங்காரயர் டலிமாவின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

— நிருபர்

## வதிரித் தபால்

கடந்தசிலகாலமாக வதிரிநிருபர் விஷயதானஞ் செய்யாதகாரணமாக நமது வாசகநேயர்கள் வெகுவாக யோசித்திருக்கலாம். நெடுங்கால வாட்சியாலே அவரது ஊற்றுப்பேனவும் வரண்டுபோயிருக்கலாம். அதனுல் அவர் எல்லாருக்கும் வருத்தந்தெரிவித்து மீண்டும் தனது ஊற்றுப்பேனவை எடுக்கத்தொடங்கியிருப்பது வாசகர்களின் அதிர்ஷ்டம்போலும்.

**வதிரி–கரவெட்டிச் சேமக்காலையில் சின்னக்கோயில் :—** இவ்விசாரணைப்பங்குச் சேமக்காலையில் ஒரு சின்னக்கோயில் அவசியமென்பதை உணர்ந்த எமது கட்டளைக்குரவர் 1955-ம் ஆண்டு மார்கழிமாதம் 8-ந்திகதி தேவமாதா மாசில்லாமல்உற்பவித்த திருநாளன்று அதற்கு அத்திவாரமிட்டார். இந்தக் கோவிற்கட்டடம் ஓரளவில் முடிவடைந்துள்ளது. நிகழும் கார்த்திகைமாதம் 2-ந் திகதி உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்கள் திருநாளன்று திரளானமக்கள்சமுகத்தில் கட்டளைக்குரவர் இருபூசைகள் நிறைவேற்றினர். அன்று மக்களுக்குண்டான மகிழ்ச்சிக்கோ ஓர்அளவில்லை. தங்கள்பெற்றூர், உற்றூர், உறவினரது கல்லறைகளின் முன்னிருந்து அவர்களுக்காகப் பூசைகாணவைத்த சுவாமியாரை அவர்கள் பாராட்டினர்கள். இதுவும் வதிரி விசாரணைப்பங்குச்சரித்திரத்தில் விசேஷப்பட்ட ஓர்சம்பவமாகும். இக்கோவிலைக்கட்ட முதன்முதலாகப் பணஉதவிபுரிந்து உற்சாகந்தந்த திரு இருதயகல்லூரிக் கிளாக்கர் அ. பிலிப்பையா, இயக்கச்சி அரசினர் பாடசாலைத் தலைமைஆசிரியர் வ. ஆசீர்வாதம், கட்டளைக்குரவரின் வலதுகரமாய்நின்று வீடுவீடாகத்திரிந்து பணஞ்சேகரித்த ஆசிரியர் என். எம். சிங்காரசா ஆகியவர்களுக்கும், மற்றும் பணஉதவி செய்தவர்களுக்கும் எல்லோர்சார்பாகவும் நன்றிதெரிவிக்கின்ரேும்.

**வடமராட்சியில் உதைபந்தாட்டம் :—** வடமராட்சியிலுள்ள ஆங்கில கல்லூரிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டி இவ்வருடமும் மும்முரமாக நடந்துவருகிறது. சென்றஇருவாரங்களாக நடந்தபோட்டிகளிலே திருஇருதயகல்லூரியின் மூன்ருவதுகோஷ்டி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்கல்லூரியை மூன்றுகோல்களால் தோற்கடித்தது. வல்வெட்டித்துறைச் சிதம்பரக் கல்லூரியுடன் நடந்த போட்டியிலே திருஇருதயகல்லூரி இரண்டாவது கோஷ்டியை நாலு கோல்களாலும், முதலாவதுகோஷ்டியை மூன்றுகோல்களாலும் தோற்கடித்தது.

**பாத்திமா கேடயமும், கிண்ணப் போட்டியும் :—** யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்க கல்லூரிகளிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப்போட்டிகளில் இரண்டு இம்மாதம் 3-ந் திகதி அர்ச். ஹென்றியரசர்கல்லூரிக்கும், திருஇருதய கல்லூரிக்குமிடையே இருதய கல்லூரிமைதானத்தில் நடைபெற்றன. இருதய கல்லூரி இரண்டாவது கோஷ்டி இரண்டுகோல்களும், அர்ச். ஹென்றியரசர்கல்லூரி இரண்டாவது கோஷ்டி ஒருகோலும் போட்டமையால், இருதய கல்லூரிக்கோஷ்டி வெற்றிமாலை சூடியது. முதலாவது கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் இருகல்லூரிகளும் ஒவ்வோர் கோல் போட்டமையால் விளையாட்டு வெற்றிதோல்வியின்றிச் சமமாகமுடிந்தது.

## வன்னித் தபால்

வளமிக்க வன்னிநகரென அறியப்படும் செட்டிகுள விசாரணைப்பங்கைச் சேர்ந்த கிறீஸ்துஇராசா கத்தோலிக்க வாலிபர்சங்க வருடாந்தவிழா சென்ற 28-10-56ஞாயிறுவாரம் கிறீஸ்து இராசா திருநாளன்று இப்பகுதியில் நடுநாயகமாகவிளங்கும் முதலியாகுளம்என்னும் முன்மாதிரிக்கிராமத்திலே சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதிகாலை விழாவிற்குஆயத்தமாக முதலியாகுளம் அர்ச். அந்தோனியார் கோவில்மணிகள் ஆர்ப்பரிக்கவே, செட்டிகுளம், நேரியகுளம், இலுப்பைக்குளம், முதலியாகுளம் முதலாமிடங்களிலிருந்து வாலிபரும், ஆடவர்கள், பெண்கள், பிள்ளைகளும் திரளாக வந்து குழுமினர்கள். பலிபீடம் பல வர்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காலை 8-30மணிக்குக் கட்டளைக்குரவர் வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். முதலியாகுளம் கத்தோலிக்கபாடசாலை ஆசிரியரும், மாணவரும் கீதம்இசைத்தனர். பூசைவேளை "பரிசுத்தபாப்பரசர் சிறியவத்திக்கானில்வீற்றிருந்து இந்தப்பெரியஉலகத்தை ஞானஆட்சிசெய்வதுபோல், கிறீஸ்துஇராசாவும் வாலிபரின் சிறிய இருதயங்களில்வீற்றிருந்து அரசாளவேண்டும்; அவரே வழிகாட்டியாக இருக்கவேண்டும்" என்பதைப் பீடிகை வாக்கியமாகக்கொண்டு சுவாமியவர்கள் மதுரமான ஓர்பிரசங்கஞ்செய்தார்.

பூசையின்பின் முதலியாகுளம் க. பாடசாலை மண்டபத்தில் நாலுகிராமங்களையுஞ்சேர்ந்த வாலிபர்குழுமியிருந்து கட்டளைக்குரவர்தலைமையில் காலைப்போசனம் அருந்தினர். பின்னர் பொதுக்கூட்டம் கடவுள்வணக்கத்துடன் ஆரம்பமானது. முதலியாகுளம் க. பாடசாலைத் தலைமைஆசிரியர் எம். சி. யோசெவ் எஸ்பீரியர்அவர்கள் சுவிசேஷம்வாசிக்க, சுவாமியாரால் விளக்கம்கொடுக்கப்பட்டது. புதுவருட உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரியப்பெற்ருர்கள். செட்டிகுளப் பகுதி நீர்ப்பாசன அதிகாரி ஏ. மரியாம்பிள்ளை பொதுச்சங்க தலைவர். இலுப்பைக்குளம் க. பாடசாலைத் தலைமைஆசிரியர் க. வில்லியம் கந்தசாமி உபதலைவர். முதலியாகுளம் க. பாடசாலைத் தலைமை ஆசிரியர் எம். சி. யோசெவ் எஸ்பீரியர் பொதுச்சங்கசெயலாளர். செட்டிகுளப்பகுதி விளைபொருள்விருத்தி விற்பனவுச்சங்க மனேஜர் எஸ். ஏ. அல்வீன் உபசெயலாளர். திரு. ஞா. மரியநாயகம் தனதிகாரி. செட்டிகுளம்கிழக்கு முதலியாகுளம் கிராமச் சங்கத்தலைவர் எஸ். பி. பொன்னையா பொதுச்சங்கபோஷகர்.

பின்னர் செட்டிகுளம் க. பாடசாலை ஆங்கிலஆசிரியர் எஸ். ஏ. பி. வேதநாயகம் "வாலிபரும் நற்கருணையும்"என்பதுபற்றியும், இலுப்பைக்குளம் க. பாடசாலைத் தலைமைஆசிரியர் க. வில்லியம் கந்தசாமி "வாலிபரும் கத்தோலிக்கசேவையும்" என்பதுபற்றியும், முதலியாகுளம் க. பாடசாலைத்தலைமை ஆசிரியர் எம். சி. யோசெவ் எஸ்பீரியர் "உலகில் கத்தோலிக்கவாலிபரின் இடம்" என்பதுபற்றியும், பெரிய நொச்சிக்குளம் க. பாடசாலைத் தலைமைஆசிரியர் பி. எஸ். நீக்கலஸ் "கத்தோலிக்கசேவையும் விளையாட்டும்" என்பதுபற்றியும் திறமையாகப்பேசிநின்ருர்கள். வண. ஞானத்தலைவரால் வயோதிபரும், வாலிபராய்ச் சீவிக்கலாம்; வாலிபர்சங்கத்தை வளர்க்கும்முறை, ஒற்றுமைமுதலியன பற்றி யாவரும் வாயடங்காதுசிரிக்கத் தக்கதாகச் சமயோசிதமாகப்பேசினர். பின்பு முதலியாகுளம் க. பாடசாலைத் தலைமைஆசிரியர்எழுந்து வாலிபர்சங்கத்தை அடியிட்டு ஒருவருடமாகுமுன் எதிர்பாராது பிரிந்துசென்று தற்போது யாழ்ப்பாணமேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரராகக் கடமையாற்றும் அதிவண. பிலிப் பொன்னையா சுவாமியவர்களுக்குச் சங்கத்தின்சார்பாக நன்றிகூறினர். ஈற்றில் வாலிபரிடையேநடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியுடனும், கடவுள்வணக்கத்துடனும்விழா இனிதேநிறைவாயிற்று.

—நிருபர்.

---

❊ இருகண்டங்களில் அமைந்திருக்கும் புராதனநகரம் யாது?

துருக்கியின் முன்னைநாள் தலைப்பட்டணமாகிய கொன்ஸ்தாந்திநோப்பிள் என்ற புராதனநகரமே. இதன் ஓர் பகுதிஐரோப்பாவிலும், மற்ருேர்பகுதி டாடெனெல்ஸ் தொடுவாயினூடாக ஆசியாவிலும் அமைந்திருக்கின்றது.

❊ போர்மோசாத்தீவை முதல் கண்டுபிடித்தவர்கள் யார்?

போர்மோசாதீவு போர்த்துக்கேயரால் 16-ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இது காடுகளும், மலைகளும் அடர்ந்தது. காடுகளில் மனிததலை வேட்டையாடும் காட்டுச்சாதியினர் வாழ்ந்தனர். இவர்கள் கப்பல் உடைந்து கரைஅடைவோரையும், கற்பூரமரம்வெட்டவருவோரையும் அகப்படுத்தினர். உலகிலுள்ள கற்பூரமரங்களிற்பெரும்பகுதி இங்குவளர்கின்றது. செயற்கைக் கற்பூரங் கண்டுபிடிக்கப்படுமுன் போர்மோசா கற்பூரத்துக்குப் பெயர்பெற்றிருந்தது. ஜப்பானியர் 1895-ம் ஆண்டு இத்தீவைச் சீனரிடமிருந்து பெற்றனர். இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் இது சீனருக்குக் கொடுக்கப்பட்டது. 1949-ம் ஆண்டு தேசியசீனமக்கள் சீனுவிலிருந்து வெளியேதள்ளப்பட்டபோது அவர்கள் போர்மோசாவுக்குச் சென்றனர். அதன் தலைநகரம் தைப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானஒடுக்கமும் உறுதிப்பூசுதலும்

மயிலிட்டி, விசாரணைப்பங்கைச் சேர்ந்தமக்கள் நெடுநாள்எதிர்பார்த்திருந்த ஞானஒடுக்கமானது சென்ற 21-10-56முதல் 28-10-56வரை பக்தியருட்சியாகநடந்து, மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் அருளப்பெற்ற உறுதிப்பூசுதலுடன் இனிதே முடிவாயிற்று.

வண. சற். என். குருஸ்சுவாமியவர்களும், வண. எவ் ஜே. நவாட்ணம் சுவாமியவர்களும் ஞான ஒடுக்கம் போதித்தார்கள். பகல்வேளையிலே கட்டளைக்குரவர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்களும், ஞானஒடுக்க போதகர்களும் காணமற்போன ஆடுகளைத் தேடுவார்போல் வீடுகள்தோறுஞ்சென்று மக்களைப் பிதாவின் வீட்டுக்கு அழைத்துவந்தார்கள். போதகர்களின் ஒவ்வொர்பிரசங்கமும் அவர்களைச் சர்வேசுரன்பக்கமாக ஈர்ந்தவண்ணம்இருந்தன. முதற்பிரசங்கத்தைக் கேட்டவர்கள் மறுபிரசங்கம் எப்போதென்று ஆவலோடுஎதிர்பார்த்தபடியே இருந்தார்கள்.

விசாரணைப்பங்கைச்சேர்ந்த மக்கள் எல்லோருமே திவ்வியபூசை, சற்பிரசாதஆசீர்வாதம், தியானம், பிரசங்கம், செபமாலை, சிலுவைப்பாதை, ஆத்துமசோதனை போன்ற ஞானகாரியங்களிலே வாரமுழுவதும் மனுேற்சாகமாகப் பங்குபற்றினுர்கள். ஞாயிற்றுக்கிழமை காலை 6-30மணியளவிலே மகாவந். எமதுஆயரவர்கள் அதிகாரபூர்வமாக முதன்முறையாய் இங்குஎழுந்தருளவே, கோவிலிலிருந்து கால்மைல்தூரம் வரை மக்கள் எதிர்கொண்டுசென்று அவரைவரவேற்று, வாத்தியவரிசைகளுடன் கோவிலுக்கு அழைத்துவந்ததும் அவரால் திவ்வியபூசை நிறைவேறியது. பெருந்தொகையானுேர் திருவிருந்துப் பந்தியமர்ந்தார்கள். பூசைமுடிந்ததும் பிள்ளைகளும், வளர்ந்தவர்களுமாக இருநூறுபேர்வரை உறுதிப்பூசுதல் செய்யப்பெற்றுர்கள்.

பிற்பகல் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது ஞானஸ்நான வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்பட்டது. 5மணிக்கு ஆயர்அவர்களுக்கும், ஞானஒடுக்கபோதகர்களுக்கும் நன்றிகூறுமுகமாக அவர்களைவரவேற்று வாத்தியவரிசைகளுடன் அழைத்துச்சென்று அழகுறச் சிங்காரிக்கப்பெற்ற பாடசாலைமண்டபத்தைச்சேர்ந்ததும் பாடசாலைமாணவர்கள் வரவேற்புக்கீதம் பாடினுர்கள். ஆயர்அவர்களுக்கு மாலைகள்சூட்டி, செண்டுகள் அளிக்கப்பட்டன. திரு. எம். டோமினிக் அவர்கள் வந்தனுேபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தார். சிறந்தபோதகர்களைத் தந்துதவிய ஆயருக்கும், ஞானஒடுக்கத்தில் பங்குபற்றிய மக்களுக்கும், தம்முடன் ஒத்துழைத்த சங். சிஸ்றர்மாருக்கும் வண. கட்டளைக்குரவர் நன்றிகூறினுர். திரு. ரி. சவிரிமுத்துஅவர்கள் வண. போதகர்களுக்கு நன்றிகூறி, வண. கட்டளைக்குரவருக்கும், பங்குக்கிறிஸ்தவர்களுக்குமிடையே இருந்துவருகின்ற பரஸ்பர அன்பையும், ஒருவருடகாலத்துள் அவர்ஆற்றியுள்ளசேவைகளையும் எடுத்துக்காட்டி, அவரைப்பாராட்டினுர்.

ஆயர்அவர்கள் பேசுகையில்: விரைவிலே பாடசாலை ஆண்பெண்பாடசாலைகளாகப் பிரித்தமைக்கப்படுமென்றும், அதற்குள்ள தடைகள்நீங்க எல்லோரும் ஒருமனதாக மன்றுடிவர வேண்டுமென்றும்கூறி ஆசீர்ந்தார். இடையிடையே பாடசாலைப்பிள்ளைகளின் நடனங்கள், விளையாட்டுகள் நடைபெற்றன. — நிருபர்

## ஆசிரியர்களின் ஞான ஒடுக்கம்

புத்தளம்-சலாபப்பகுதிக் கத்தோலிக்கபாடசாலைகளின் தமிழ்ஆசிரியர்களுக்கெனச் சலாபமேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவண. மைக்கேல்பெரேராசுவாமியவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஞானஒடுக்கம் கடந்த 25-10-56 வியாழக்கிழமைமுதல் 28-10-56 ஞாயிற்றுக்கிழமை காலைவரை தலைவில்லுச் சந்தானுள்மூனீஸ்வரியின் திருசேத்திரத்தில் நடந்தேறியது ஆண்களும், பெண்களுமாக 52 ஆசிரியர்கள் அதில் பங்குபற்றினர். யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. எல். ஜே. அகஸ்ரீன்சுவாமியவர்கள் கவர்ச்சிகரமானமுறையிலே, பக்தியருட்சியான பிரசங்கங்கள்செய்து ஞான ஒடுக்க நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திமுடித்தார். ஞாயிற்றுக்கிழமைகாலை பூசைக்குப்பின்னர் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் ஞானஒடுக்கம் முடிவுற்றது. அதன்பின் அதிவண. மைக்கேல் பெரேராசுவாமியவர்களையும், ஞானஒடுக்கப்போதகரான சுவாமியவர்களையும், திருசேத்திரப் பரிபாலனர் அதிவண. மாட்டீன் பறுணுந்துசுவாமியவர்களையும் ஆசிரியர்கள் குருமனையில்சந்தித்து நன்றிகூறியதுடன், அன்பளிப்புகளும்வழங்கினர். ஞானஒடுக்க நாட்களில் சிறந்தபோசனுதிகளை ஒழுங்குசெய்தஉதவிய நாக்களிக் கத்தோலிக்க தமிழ்ச் சிரேஷ்டபாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எம். தாசியுஸ் லெம்பட்அவர்களும், ஏனையநிர்வாகிகளான கருக்குப்பனைக் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. டபிள்யு. எம் பெரேரா, ஏத்தாலைக்கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. டீ சோஸா என்பவர்களும் ஆசிரியர்களின் பாராட்டைப்பெற்றனர். ஈற்றில் அதிவண. மைக்கேல் பெரேராசுவாமியவர்களின் நன்றித்துதியுடனும், திருக்காஆசீர்வாதத்துடனும் குருமனை உபசாரநிகழ்ச்சி முற்றுப்பெற்றது. — நிருபர்

## ஞானுேபதேசப் பரீட்சை 23-11-56

மூன்றும் வகுப்புத் தொடக்கம் S. S. C.வகுப்பு ஈருகஉள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் தொகையை வகுப்பு வகுப்பாகக் குறித்து 10-11-56-க்கு முன் அனுப்பி வைக்கும்படி தலைமைஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

தாங்கள் பின்பற்றும் ஞானுேபதேசப் பாடத்திட்டம் A திட்டமோ அல்லது B திட்டமோஎன்று அறிவிக்கவும்.

J. S. C., Prep. S. S. C., S. S. C. வகுப்புகளில் A திட்டமல்லாது வேறு ஞானுேபதேசத் திட்டங்கள் பின்பற்றப்பட்டால் அவை எவையென்று விபரமாகக்குறிப்பிடவேண்டும்.

**Philip Ponniah,**
Gen. Manager, R. C. Schools
Jaffna, 30-10-56.


## 'முன்னேடி' வளர்கிருன்!

எதிர்பாருங்கள்! வருகிறது! ஈரேழுநாள் சஞ்சிகை! (FORTNIGHTLY)

**அன்புடையீர்,**

சேலத்தில் தோன்றிய மாதாந்திர பத்திரிகை 'முன்னேடி' டிசம்பரிலிருந்து 14 தினங்களுக்கொருமுறை புதுமுறையில் வெளிவரும். 'சர்வவியாபி' அளவில் 8 பக்கங்கள் கொண்டது. மாணவ மாணவிகளின் மனதைக் கவரும் பல வர்ணப்படங்கள் நிறைந்த தொடர்கதைகள், சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனமானது. தமிழ்நாட்டில் தன்னிகரில்லாததுஎன்று நீங்களே கண்டுகொள்ளுவீர்கள். பர்மா, சிலோன்முதலிய அயல்நாடுகளிலிருந்தும் ஆர்டர்கள்குவிந்துகொண்டிருக்கின்றன.

**வருடசந்தா ரூபா 4—12—0, 10 பிரதிகளுக்கு ரூபா 38—0—0.**

**தமிழர்கள் குடியிருக்குமிடங்களிலெல்லாம் ஏஜண்டுகள் தேவை.**

விபரங்களுக்கும், மாதிரிப் பிரதிக்கும் எழுதவும்:

ஆசிரியர், முன்னேடி காரியாலயம்,
கத்தீட்ரல், சேலம்—2.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 523**

யாழ்ப்பாணம், 2-ம் குறுக்குத்தெரு சிங்கராயர் சூசைப்பிள்ளை.
— வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிரோட்டு, பிலிப் கபிரியல் டேவிற்
— எதிராளி

யாழ்ப்பாணம், டிஸ்திறிக்கோட்டின் M. B. 523-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956-ம்ஆண்டு மார்கழிமாதம் 8-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 2615/44-ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 1500-க்குப் 10 வீத வட்டி 22-9-55 தொடக்கம் 21-2-56 வரைக்கும். அதன்மேல் முழுத்தொகைக்கும் 21-2-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீதவட்டியும், கோட்டுச் செலவுரூபா 188/57உம். இதில் ரூபா 125 கோட்டுச்செலவில் கொடுபட்டது.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்றுக் கரையூர்இறை. "குமாரன்துறையும், மனுதுங்கமுதலியார் வளவும்" பர. நிலை. இலா. 1. வீடும், கிணறும், செய்பயிர்களும். இதற்குஎல்லை — கிழக்கு: ரோட்டு. வடக்கு: எதிரியுடையதும், பிலிப் கபிரியலுடைய ஆதனமும். மேற்கு: தீயோப்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு: ஆசீர்வாதம் பெண் றேசலினின் ஆதனம். இதில் சொரியலாய் $14\frac{5}{8}$ குளியும், அதைச் சேர்ந்த பயிர்வகைகளில் சரிசமமான பங்கும். இந்தப் $14\frac{5}{8}$ குளியும், இதில் சொல்லப்பட்ட முழுக்காணியிலும் சொரியலாய் $\frac{13}{16}$ பங்கு. D$\frac{193}{124}$-ம் புஸ்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனர்.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
19-10-56

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 795**

1. அந்தோனிப்பிள்ளைசூசைப்பிள்ளை,
2. பெண் மாகிறெற், கரையூர், யாழ்ப்பாணம் ………… வழக்காளிகள்

1. அவுரும்பிள்ளை சுவக்கீன் அல்லது அல்போன்செஸ்,
2. பெண் செபமாலை, கரையூர்.
3. சின்னத்தம்பி சுப்பிரமணியம்,
4. பெண் பொன்னம்மா, புங்குடுதீவு,
5. அந்தோனி யோசேப்பு,
6. பெண் ஆகத்தம்மா, கரையூர், யாழ்ப்பாணம்…… எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 795-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1956-ம்ஆண்டு மார்கழிமாதம் பதினெட்டாந்திகதி (18-12-56) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 7369/- உம் இதில் ரூபா 5500/-க்கு 6-2-56 தொடக்கம் 21-6-56 திகதிவரைக்கும் 100-க்கு 9 வீதவட்டியும், பின்திகதி தொடக்கம் இறுக்கப்படும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும். இதில் முதலும், வட்டியும் ரூபா 2075/- கொடுபட்டது. கோட்டுச்செலவு ரூபா 200/-ம், முத்திரைச்செலவு ரூபா 12/-ம் வருமதி.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று, கரையூர்இறை "பெரியான்மனத்தடி" நாலரைப்பேச்செஸ். (A. 0., R. 0., P. $04\frac{1}{2}$). புதிதாய்க்கட்டப்பட்ட கல்வீடும், கிணற்றில் அரைவாசிப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், எல்லை: கிழக்கு—தொம்மையோசேப்புவும், பநகாளருக்குமுரிய ஆதனம். வடக்கு—ஒழுங்கை. மேற்கு—ரோட்டு. தெற்கு—யாக்கோப்பு அகஸ்தீனுக்கும், பெண் எலிசபேத்துக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

**தா. செல்லையா,**
கொமிஷனர்

No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 8-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## மிகவும் இரக்கமுள்ள தாயே!........

அர்ச். பிரான்சீஸ்சலேசியார் சிறு பிராயத்திலிருந்தே திவ்விய யேசுவை அத்தியந்தஅன்போடு நேசித்துவந்தவர். அவருடைய தாயாரைத் தமது மதுரஅன்னை, இனியதாய் என்று மதித்துத் தம் நம்பிக்கையை எல்லாம் அப்பரமநாயகியின்மீது வைத்திருந்தார். சிறுபிள்ளையாய் இருக்கும்போதே தமது கற்பைத் தேவதாய்வசம் ஒப்படைத்திருந்தார். அவருக்குப் பதினேழு பிராயம் நடக்கையில் பரீஸ்நகர சர்வ கலாசாலையில் உயர்தரக்கல்வி கற்றுக் கொண்டிருந்தார். அவருடைய மாசற்ற நடத்தையின் பலனாக அவர் இருதயம் எப்போதும் ஞான சந்தோஷத்தினால் நிறைந்திருக்கும். ஆனால், அளவில்லாத ஞானமுள்ள ஆண்டவர் தமது தாசனின் விசுவாசத்தைச் சோதிக்கச் சித்தமானார் போலும். நரகப்பேய் அவருக்குப் பயங்கரமான ஓர்சோதனையை வருவித்தது. "பிரான்சீஸ், உனக்கு மோட்ச பேரின்ப பாக்கியம் கிடைக்காது; நீ என் இராச்சியமாகிய நித்திய நரகத்துக்கு நியமிக்கப் பட்டவன்" என்னும் அவநம்பிக்கையை அவர்மனதில் ஆழமாய்ப் பதியச்செய்தது அந்த நீசப் பிசாசு. இவ்வளவு காலமாய்த் தாம் ஆண்டவரை நேசித்ததும், தேவதாயாரைத் தன் சொந்தத்தாயாக மதித்து அப்பரம அன்னையின் மட்டில் அளவிறந்த நம்பிக்கை வைத்திருந்ததும் வீணாய்ப் போயிற்றேஎன்று பயந்து நடுங்கித் திகிலடைந்து சகிக்கமுடியாத மனோவேதனைக்குள்ளானார். அவர் முகத்தில் எப்போதும் விளங்கும் செந்தளிப்பும், சந்தோஷமும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோயின. நரக நெருப்புக்கு ஆளாகப் போகிறேன் என்கிற அச்சத்தினால் அவர் சரியாய்ச் சாப்பிடுகிறதுமில்லை, நித்திரை செய்கிறதுமில்லை. அவருடைய பரிசுத்த ஆத்துமம் அவநம்பிக்கையினால் அலைக்கழிக்கப் பட்டுத் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தது. அதனால் அவர் எண்ணமும், பேச்சும் அவருடைய இருதயத்தை வாட்டி வதைத்து வெளிப்படுத்தியது. அவருக்கு அறிமுகமானவர்களெல்லாம் அவருடைய பரிதாபகரமான நிலைமையைக்கண்டு அவர்மீது அனுதாபப் பட்டார்களேயன்றி அவருக்கு எவ்விதத்திலும் உதவிசெய்ய முன்வரவில்லை. இவ்வாறு ஒருமாதகாலமாய்க் கஷ்டப் பட்டார். ஆறுதல் அளிப்பவர் எவருமில்லை.

இந்த நிர்ப்பாக்கிய நிலையில் ஓர்நாள் அர்ச். பிரான்சீஸ் அப்பட்டணத்திலிருந்த ஒரு சிற்றாலயத்துள் தனியே நுழைந்தார். அங்கு மாதாசுரூபத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் ஏதோ எழுதியிருப்பதைக் கவனித்துப் பார்த்தார். "மிகவும் இரக்கமுள்ள தாயே, உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உபகார சகாயங்களின் உதவியைக்கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப் பட்டதாக ஒருபோதும் உலகில்சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்று நினைத்தருளும்" என்கிற வாக்கியம் அதில் வரையப்பட்டிருப்பதை வாசித்தார். வாசித்ததும், மாதாபீடத்துக்குமுன் சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து, "அம்மா, தாயே! துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! உமது பிள்ளையை இப்படிக் கைவிட உமது இரக்கமுள்ள இருதயம் துணிந்ததா?" என்று வாய்விட்டு அலறிக் கண்ணீர்சிந்தி அழுதார். பின்எழுந்து முழந்தாளிலிருந்து, "மிகவும் இரக்கமுள்ள தாயே" எனும் செபத்தை முற்றிலும் செபித்து, தான் ஏற்கனவே கொடுத்திருந்த விரதத்தத்துவ வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்து: "தாயே, உமது திருமகனை என் முழு இருதயத்தோடு நேசிக்கும் வரத்தை எனக்குப்பெற்றுத் தந்தருளமாட்டீரா" என்று மன்றாடினார். அந்தக்ஷணத்திலேயே மதுரகுண தேவஅன்னை தமது தாசனின் மன்றாட்டைக் கேட்கச் சித்தமானார். அவரை வருத்தித் துன்புறுத்திய சோதனை அவரைவிட்டு அகன்று போனது. பிரான்சீஸ் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அடைந்தார். சர்வகலாசாலையின் பெரியபரீட்சைகளிற் சித்தியெய்திக் குருப்பட்டம்பெற்று, மேற்றிராணியார் பதவிக்கும்உயர்த்தப்பட்டுத் திருச்சபையின் அணிகலமாகவும், விசுவாசிகளுக்கு ஓர்உத்தம முன்மாதிரிகையாகவும் விளங்கினார்.

# குருவானவர் சொல்லிய பிரசங்கம்

"கிறீஸ்துவில் எமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே", என்று ஆரம்பித்தார் குருவானவர். அவர் ஐரிஷ்காரர். பலவர்ணனைகளுடன் கதை சொன்னாலும் அவருடைய குட்டிப் பிரசங்கங்கள் மன வருட்சிநிறைந்தவை. நீங்கள்எல்லோரும் நற்கருணையில் மிகவும் பக்தியுள்ளவர்களென்று அறிவேன். ஆகையால், உங்களுக்கு உண்மைச் சம்பவமொன்றைச் சொல்லுகிறேன். சிலர் அதை நம்பமாட்டார்கள்தான்; ஆனால், அது மெய்மையாக நடந்தது. இந்தச்சம்பவத்தில் நேரடியான தொடர்புள்ளவர்தாமே இதை எனக்குக் கூறியிருந்தார்.

"சுருக்காய்ச் சொல்லி முடிக்கிறாரில்லையே" யென்று கூறுவதுபோன்ற முகத்துடன் சனம் பிரசங்கத்தைக்கேட்க ஆயத்தமாகினர்.

இருபத்துநான்குவயதுள்ள ஒருவாலிபன் பட்டணத்தில் குமாஸ்தா வேலையாயிருந்தான். கோடைகாலத்தில் அவனுக்கு ஒருவார ஓய்வு கிடைத்தது. அவன் புரொட்டஸ்தாந்த சமயத்தவன்; ஆயினும் யோக்கியன்.

ஓய்வுகிடைத்ததும் போன்மத் நகருக்குப்போய் அவ்வாரத்தைக் கழிக்கத் திட்டமிட்டான். தங்குவதற்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். எங்கே தங்குவதென்று நிச்சயப்படுத்தாதபடியால் போன்மத்துக்கு வந்து, தங்குவதற்கு வசதியான விடுதி கிடைக்குமோவென்று பலஇடமும் விசாரித்தான்.

போன்மத்து பெரியபட்டணம்என்று அறிவீர்கள். ஆனல், விடுதிச்சாலைகள் எல்லாம் நிறைந்துபோயிருந்தன. கடைசியாக ஓரிடத்துக்கு வந்து விசாரித்தான். "சனம் நிறையஉண்டு", என்றாள் விடுதி எசமாட்டி. "அறைஒன்று காலியாயிருக்கிறதுதான்; ஆனல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நாங்கள் ஒருவருக்கும் வாடகைக்கு விடுகிறதில்லை.''

ஏன் அப்படி ?

ஏனென்ருல் ஐயா, அங்கே பூதம் ஒன்று நடமாடுகிறது.

பூதமா? பூதத்துக்கு நான்பயப்படுவதில்லை; அதிலே எனக்கு நம்பிக்கையுமில்லை. அந்த அறையை நான் எடுக்கட்டுமா ?

'' எடுக்கலாம், ஆனல், நாளைக்கு எங்களைக் குறைகூற வேண்டாம்,'' என்ருள் வீட்டுக்காரி. அவ்வாலிபன் சிரித்துவிட்டு, அறைச்சாவியையும் பெற்றுக்கொண்டு சென்ருன்.

அவன் அறைக்குட்சென்று அயர்ந்து நித்திரையாஞன்.

அப்படியிருக்கும்பொழுது நடுச்சாமத்தின்பின், விழித்துக்கொண்டான். ஏது காரணத்தால் விழித்ததென்று அறியாமல், எழுந்து உட்கார்ந்தான். என்ன ஆச்சரியம்! அவனுக்குமுன் ஓர்வயோதிகனின் உருவந்தெரிந்தது. அவ்வுருவம் ஒருவார்த்தையும் பேசவில்லை. தன்னுடன் வரும்படி சைகைசெய்தது. அவ்வாலிபன் தயக்கமின்றி எழுந்து பின்தொடர்ந்தான்.

தொடர்ந்து, மேல்மாடியிலிருந்து கீழிறங்கி, முற்றத்தைக்கடந்து, ஓர் பழையவீட்டை நோக்கிச் சென்ருன். அந்தவீட்டின் மரங்களெல்லாம் உக்கி, பலவருடங்களாகத் தூசுபடிந்திருந்தன.

தோற்றத்தில் ஓர் குருவானவரைப் போன்றிருந்த அம்முதியவர் ஒன்றும் பேசினரில்லை. கையால் அவ்வீட்டுக் கூரையின் ஓர்பகுதியைக் காட்டினர். காட்டியதும் மறைந்துவிட்டார். அவ்வாலிபனுடைய மனதில் பலஎண்ணங்கள் மோதின. திரும்பிவந்து நித்திரை கொண்டான்.

அடுத்தநாள் அதிகாலையில், விடுதிச்சாலை எசமாட்டி அவ்வாலிபனைச் சந்தித்து '' இராத்திரி எப்படி இருந்தது ?'' என்று கேட்டாள். '' என்னுடன்கூட வந்தால் நான்உங்களுக்கு ஒன்றுகாட்டுவேன் '' என்ருன் அவன். அவளை அப்பழையவீட்டிற்கு அழைத்துச்சென்று, முந்தியஇரவு தனக்குக் காட்டப்பட்ட கூரைப்பகுதியைக் காட்டினன். '' நீங்கள் சொன்ன பூதத்தைக் கண்டேன். அது ஓர்குருவானவர்போலத் தோன்றிற்று. அவர் என்னை இங்கு அழைத்துவந்தார். ஓர்வார்த்தை பேசவில்லை. அந்தக் கூரையைக் காண்பித்தார். அதை நாம் தேடிப்பார்க்கவேணுமென்றது அவருடைய விருப்பம்போலும்.''

விடுதிச்சாலையார் சம்மதித்தனர். தேடல் நடந்தது. என்னகண்டதென்று நினைக்கிறீர்கள் ? ஒருபூசைப்பாத்திரமும், ஒருநற்கருணைச்சிமிழும், ஓர் பழைய செபப்புத்தகமும் கண்டார்கள். முதலாம்எலிசபேத் அரசி காலத்தில் அவ்வில்லம் குருமாரின் மறைவிடமாயிருந்தது. ஆபத்து அண்மையில்வந்தபோது, அவ்வீட்டுக்கூரைக்குள் அப்பாத்திரங்களை மறைத்துவிட்டார், அவ்விரவில் தரிசனந்தந்தவர். அக்காலத்திலிருந்து அவ்வாலிபன் பூதங்களுக்குப் பயமின்றி விடுதிச்சாலை அறையில் தங்கும்வரை, அவ்வுருவத்தைக் காணும்வரை, அவைஅங்கேயே மறைந்துகிடந்தன.

மறைந்துகிடந்து, பின்பிரசித்தமான அப்பொருட்களின். மர்மம் அவ்வாலிபனுடைய மனதில் எவ்வளவாகத் தைத்ததென்ருல், அவன் சத்தியவேதத்தை ஆராய்ந்துபடித்து, ஞானஸ்நானம்பெற்று, கிறீஸ்துவனுகியது மாத்திரமல்ல, குருவாகி, இப்பொழுது மேற்றிராணியாராயுமிருக்கிருர்.

அருமைப்பிள்ளைகளே! எமது பீடங்களில் வீற்றிருக்கும் திவ்வியநற்கருணைநாதரை அதிகமதிகம் நேசியுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என்றுசொல்லிப் பிரசங்கத்தை முடித்தார் குருவானவர்.

(Annals of Our Lady of The Angels)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை

## எலிகளின் மகாநாடு

முன்னொரு காலத்தில் எலிகள் மகாநாடு 'பூனைக்கு மணிகட்டும்' நோக்கமாகக் கூடப்பட்டது. ஆனல், பூனைக்கு மணிகட்டுவது யார்? என்ற பிரச்சினை எழுந்தபோது மேற்படி மகாநாடு கலைக்கப்பட்டது.

ஆனல், பலவருடங்களின்பின் திரும்பவும் 'எலிகளின்மகாநாடு' கூடப்பட்டது. அதற்குத் திருவாளர் வெள்ளெலி அவர்கள் தலைமை வகித்தார்கள். மகாநாட்டிற்குப் பற்பல இடங்களிலிருந்து அங்கத்தினர்கள் சமுகமளித்தனர். மகாநாடு ஆரம்பமாயிற்று. முதன்முதலாகத் திருவாளர் வெள்ளெலி எழுந்து பேசியபோது: "விஞ்ஞானஉலகம் தற்பொழுது மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அதனல் இப்பொழுது 'பிளேக்' கினல் இறப்பவர்கள் எண்ணிக்கை அருகிக்கொண்டே வருகின்றதெனலாம். ஆகையால், நாம் மனித வர்க்கத்தை அழிப்பதற்கு வேறேதேனும் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கு நமது வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களை அவசியம் வரவழைக்க வேண்டும்" என்ருர்.

அடுத்தபடியாக வேருெருவர் (உணவுப்பிரியர்) எழுந்து: "நாம் வீடுகளைக் கொள்ளை அடித்து உண்ணும்போது ஏற்படும் சத்தத்தினல் நித்திரை கொள்ளுகிறவர்கள் விழித்துக்கொள்ளுகிருர்கள். ஆகையால், அப்படிச்சத்தம்கேட்காமல் அவ்விடங்களில்'ஒலிசுருக்கிகள்'அமைக்கப்படவேண்டும்" என்ருர். இதற்கு எல்லோரும் கைதட்டிச் சீட்டியடித்தனர். சிலர் 'உவண்ஸ்மோர்' போட்டனர்.

அதன்மேல் திருவாளர் 'வெல்ஸ்' (வெளிநாட்டு அங்கத்தவர்) பேசுகையில்: "இவை ஒன்றும் நமக்குத் தற்போது அவசியமில்லை. முந்த, திருவாளர் பூனையிடமிருந்து தப்பிக்கொள்வதற்கு ஏதும் வழிசெய்யவேண்டும். அப்பொழுதுதான் நாம் சுதந்திரமாக உலாவலாம்" என்ருர்.

அதற்கு வேருெருவர்: "ஏன் இப்பொழுதுதான் அணுக்குண் டிருக்கிறதே. பூனையைச் சுலபமாய்க் கொன்றுவிடலாம்" என்ருர்.

அப்பொழுது "மியா, மியா" என்னும் பயங்கர ஒலிகேட்டது. அவ்வளவுதான் மகாநாடு தவிடுபொடியாயிற்று.

— வே. சாமுவேல்

## அருமைச் சகோதரங்களே!

ஒருபையன் ஓர்கடையில் வேலையாய் இருந்தான். அவன் நேர்மையற்றவன். அவன் அக்கடையில் சிறு களவெடுக்கப் பழகிக் கொண்டான். நாளாவட்டத்தில் பெரியகளவு எடுத்து வந்தான்.

பலநாட் கள்வன் ஒருநாள் பிடிபடுவான் அல்லவா? அப்படியே ஒருநாள் பிடிபட்டான். கோட்டில் குற்றவாளியென்றும், திருடியகாசு முழுவதுங்கட்டவேணும் அல்லது மறியல்என்று தீர்வை பெற்ருன்.

காசுகட்ட அவனிடம் ஒருசெம்புச் சல்லியும் கிடையாது. என்ன செய்வது? அவனுடைய சகோதரன் பிணைநின்று தான் காசுமுழுவதையுங் கட்டுவதாக வாக்களித்தான். அளித்துத் தன்சகோதரனை விடுதலையாக்கினன்.

நாம் இம்மாசம் உத்தரிப்புஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களை நினைவுகூருகிருேம். அவர்கள் உலகத்திலிருக்கும்போது தம்முடைய பாவத்துக்குரிய கடனைத் தீர்க்காமல் விட்டார்கள். அதற்காக இப்பொழுது தாங்கமுடியாதவேதனையை அனுபவிக்கிருர்கள். நீங்கள் அவர்களுக்கு உதவிசெய்ய மாட்டீர்களா? உங்கள்செபம், பூசை, நற்கருணை, செபமாலை, ஒறுத்தல்முயற்சிகளால் அவர்கள் இறுக்கவேண்டிய கடனைத் தீர்க்கலாம்.

அண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org